# சிப்பாய்களினல் தாக்கப்பட்ட எம். பி. யை


Registrel as a News Papar in Ceylon  விலை சதம் 15  ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 3
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 2  துல்ஹஜ் 6  வெள்ளிக்கிழமை  [13-2-70]



உங்களுக்குத் தேவையான
தங்க, வைர நகைகளுக்கு
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 7119  தந்தி: வைரம்


# தளபதி பார்த்தார்

## முகாமை விட்டுவெளியேற இராணுவத்தினருக்கு தடை

வல்வெட்டித்துறை, வியாழன்

வல்வெட்டித்துறையில் இராணுவத்தினரால் தாக்கப்பட்டு மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவரும் பருத்தித்துறைப் பிரதிநிதி திரு. கே. துரைரத்தினத்தை ராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சேபால அட்டிகலே இன்றுகாலை போய்ப்பார்த்தார். நடந்தசம்பவங்களுக்காக தமது ஆழ்ந்தவருத்தத்தைத் தெரிவித்துக்கொண்ட ராணுவத் தளபதி, 'குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள்' என்று உறுதி கூறினார். விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர் சொன்னார்.

ஆஸ்பத்திரியிலிருக்கும் திரு. துரைரத்தினத்தை திரு. அமிர்தலிங்கம், தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவரும் ஊர்காவற்றுறைப் பிரதிநிதியுமான திரு. வ. நவரத்தினம், செனட்டர் எஸ். நடராசா ஆகியோரும் மற்றும் பலரும் சென்றுபார்த்தனர். மன்னார்ப் பிரதிநிதி திரு. வி. ஏ. அழகக்கோன் மற்றும் பலர் தொலைபேசிமூலம் அவரின் உடல்நிலைபற்றி விசாரித்தனர்.

# தாக்கிய சிப்பாய்களை எம். பி. அடையாளம் காட்டினர்

## மன்னாரில் சிங்கரெஜிமென்ட் அணி வாபஸ்

### கொந்தளிப்பான சூழ்நிலை தணியும் அறிகுறி

தள்ளாடி, வியாழன்

மன்னாரில் இதுவரை முகாமிட்டிருந்த 'சிங்க ரெஜிமண்ட்' அணியைச் சேர்ந்த ராணுவச் சிப்பாய்கள் திருப்பியழைக்கப் பட்டுள்ளனர்.

மன்னாரில் இந்த அணியினருக்கும் பொதுமக்களுக்குமிடையில் சமீபகாலமாகப் பகைமையான சூழ்நிலை நிலவி வந்தது. சிப்பாய்கள் அத்துமீறிய செயல்களில் ஈடுபடுவதாகவும் பொதுமக்களைத் தாக்குவதாகவும் முறைகேடான செயல்களில் ஈடுபடுவதாகவும் பொதுமக்கள் புகார் கூறிவந்திருக்கிறார்கள். அதேசமயம் சமீபத்தில் ஒரு சம்பவத்தின்போது [...] தேடி ஓடியிருந்தார்கள்.

சிவில் உடையில் வன்முறைகளில் ஈடுபடமுயன்ற இராணுவத்தினர் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. பொலிசாரும், அரசாங்கமும் தலைவர்களும் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக அப்பகுதியில் கொந்தளிப்பான சூழ்நிலை தணிந்து அமைதி உருவாகிக்கொண்டிருந்தது. ஆனல் மீண்டும் ராணுவத்தினர் அடாத செயல்களில் ஈடுபடத் தொடங்கியிருப்பதாகப் புகார்கள் கிளம்பின. பள்ளிமாணவர்கள் சிலர் இரக்கமின்றி ராணுவத்தின[...]

## அடையாள அணிவகுப்பில் இளம்பெண் அழுதார்

வல்வெட்டித்துறை, வியாழன்

தம்மைத் தாக்கிய இராணுவ சிப்பாய்களை பருத்தித்துறைப் பிரதிநிதி திரு. கே. துரைரத்தினமும் மற்றும் இருவரும் இன்று அடையாளம் காட்டினர். பருத்தித்துறை இராணுவ முகாமில் பருத்தித்துறை நீதிபதி திரு. கே. விக்னராசா முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடைபெற்றது. பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமான அடையாள அணிவகுப்பு மாலை ஆறரை மணியளவில் முடிவடைந்தது.

திரு. துரைரத்தினம் மூன்று சிப்பாய்களையும் விநாயகமூர்த்தி என்பவர் மூன்று சிப்பாய்களையும் அடையாளம் காட்டினார்கள். அன்னப்பெட்டை என்ற பெண் மூன்று சிப்பாய்களை அடையாளம் காட்டிவிட்டு கதறி அழு[...]

### மார்ச் 12-ம் திகதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும்

பன்னிரண்டு இராணுவ சிப்பாய்கள் அடையாளம் காட்டப்பட்டிருப்பதால் தாக்குதல் சம்பவம் பற்றி பொலிசார் தொடர்ந்து புலன்விசாரணை செய்வர். தொடர்ந்து இவர்கள்மீது வழக்குத் தாக்கல் செய்வது பற்றி அடுத்த மாதம் 12-ந் திகதிக்கு முன் அறிக்கை சமர்ப்பிக்கும்படி நீதிபதி திரு விக்னராஜா பொலி[...]

## பாடசாலைகள் மூடப்பட்டன

நேற்றுப் பிற்பகல் நடந்த ராணுவத்தாக்குதல் சம்பவத்தின் பின்னர் நேற்றிரவு ராணுவ முகாமுக்குச் சமீபத்திலுள்ள சில வேலிகளுக்கும் தீவைக்கப்பட்டதாகவும் தீப்பிடித்ததைக்கண்டு வீட்டுக்காரர் கூச்சலிட்டபோது நான்கு பேர்ஓடிச்சென்றதைக்கண்டதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

நேற்றைய சம்பவத்தைத் தொடர்ந்து பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்ப அப்பகுதிப் பெற்றோர் மறுத்துவிட்டதால் அப்பகுதியிலுள்ள நான்குபாடசாலைகள் இன்று மூடப்பட்டிருந்தன. இதுசம்பந்தமாக பாடசாலைத் தலைமையாசிரியர்கள் வடபகுதி வித்தியாதிபதியுடன் தொடர்புகொண்டுள்ளனர். இதேசமயம் தங்கள் பிள்ளைகள் பயமின்றிப் பாடசாலைகளுக்குச் சென்றுவருவதற்குத் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடு செய்துதரவேண்டுமென்றும் அதுவரையில் தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பமுடியாதென்றும் இப்பகுதிப் பெற்றோர் சிலர் கல்விஅமைச்சருக்குத் தந்திமூலம் தெரிவித்திருக்கின்றனர்.

## பிரதமருடன் எஸ். ஜே. வி தொடர்பு, இன்று எக்ஸ்ரே சோதனை

பருத்தித்துறைப் பிரதிநிதி தாக்கப்பட்டது சம்பந்தமாகவும் மாணவர்களும் மற்றும் பொதுமக்களும் ராணுவச் சிப்பாய்களினல் தாக்கப்பட்டது சம்பந்தமாகவும் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனும், பிரதமர் திரு. டட்லி சேன[...]

இராணுவ முகாமில் அடையாள அணிவகுப்பு நடைபெற்றது. இந்த அணிவகுப்பை பருத்தித்துறை நீதிபதி திரு விக்னராசா நடத்தினார்.

இன்று காலை விசேஷவிமானத்தில் வந்துசேர்ந்த இராணுவத்தளபதி மேஜர்ஜெனரல் சேபால அட்டிகல வடபகுதிப் பொலிஸ் சுப்ரின்[...]

# சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்றுமாலை இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவதுபரிசு
01 M 0540  100,000

2-வது பரிசு
21 X 0983  40,000

3-வது பரிசு
09 J 0383  10,000

தலா ரூ 591-70 சதம் பரிசுபெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 06 T 0230 | 33 K 0023 |
| 27 Y 0826 | 16 V 0676 |
| 05 O 0236 | 24 C 0952 |
| 03 L 0796 | 31 W 0203 |
| 20 Q 0394 | 17 L 0482 |
| 42 K 0313 | 13 Z 0318 |
| 26 P 0064 | 1[illegible] V 0583 |
| 21 E 0181 | 40 M 0280 |
| 20 D 0101 | 32 T 0690 |
| 22 O 0735 | 21 W 0859 |
| 15 M 0794 | 27 E 0972 |
| 23 Z 0501 | 01 X 0340 |
| 22 L 0281 | 10 L 0710 |
| 35 B 0902 | 11 R 0867 |
| 36 E 0741 | 37 T 0154 |
| 12 B 0478 | 39 D 0044 |
| 18 Y 0329 | 14 N 0468 |
| 09 U 0625 | 05 C 0106 |
| 28 F 0321 | 03 H 0669 |
| 04 W 0391 | 40 A 0229 |
| 19 L 0385 | 27 T 0140 |
| 40 H 0373 | 14 L 0683 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டான செயல்களில் ஈடுவது வதாகவும் பொதுமக்கள் புகார் கூறிவந்திருக்கிறார்கள். அதேசமயம் சமீபத்தில் ஒரு சம்பவத்தின்போது இரு ராணுச் சிப்பாய்கள் கொல்லப்பட்டு கடற்கரையில் புதைக்கப்பட்டிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டனர்.

இதன்காரணமாக மேலும் கிளர்ச்சிகள் வலுக்கக்கூடிய சூழ்நிலைஏற்பட்டது. ராணுவத்தினருக்குப் பயந்து தள்ளாடிப் பகுதியிலுள்ள பொதுமக்கள் அயலூர்களுக்குப் புகலிடம் அடாத செயல்களில் ஈடுபட்டுத் தொடங்கியிருப்பதாகப் புகார்கள் கிளம்பின. பள்ளிமாணவர்கள் சிலர் இரக்கமின்றி ராணுவத்தினரால் தாக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இந்த நிலைமையில் சிங்க ரெஜிமன்ட் வாபஸ் பெறப்படுவது மீண்டும் மன்னார்ப் பகுதியில் அமைதியான சூழ்நிலையை உருவாக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த அணியினருக்குப் பதிலாகப் புதிய அணியொன்று அனுப்பப்பட்டுள்ளது.

கள். அன்னப்பெட்டை என்ற பெண் மூன்று சிப்பாய்களை அடையாளம் காட்டிவிட்டு கதறி அழுதார்.

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்ரின்டென்ட் திரு ஜோக்கிம், பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்த கேணல் இராமநாயகா, வல்லை இராணுவ முகாமைச் சேர்ந்த காப்டன் ரூபசிங்கா ஆகியோர் அடையாள அணிவகுப்பு நடவடிக்கைகளைக் கவனித்தனர். தாக்கப்பட்டவர்களின் நலன்களைக் கவனிப்பதற்காக திருவாளர்கள் கே. எஸ். சண்முகசுந்தரம், வேலும்மயிலும், எஸ். நடராசா ஆகியோரின் அனுசரணையுடன் அட்வக்கேட் அ. அமிர்தலிங்கம் ஆஜராயிருந்தார். இந்த அடையாள அணிவகுப்பில் 62 பேர் கலந்து கொண்டனர். இவர்களில் பன்னிரண்டு பேர் அடையாளம் காட்டப்பட்டனர்.

சிப்பாய்கள் அடையாளம் காட்டப்பட்டிருப்பதால் தாக்குதல் சம்பவம் பற்றி பொலிசார் தொடர்ந்து புலன்விசாரணை செய்வர். இந்த விசாரணையைத் வழக்குத் தாக்கல் செய்வது பற்றி அடுத்த மாதம் 12-ந் திகதிக்கு முன் அறிக்கை சமர்ப்பிக்கும்படி நீதிபதி திரு விக்னராஜா பொலிசாரைக் கேட்டிருக்கிறார்.

# உள்ளூராட்சி வாரம்

## இறுதி நாள் விழா யாழ். நகரில் இடம் பெறும்

மல்லாகம், வியா.

உள்ளூராட்சி அமைச்சின் வேண்டுதலின் பேரில் கொண்டாடப்படும் உள்ளூராட்சி வார இறுதி நாள் விழாவும், யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ விழாவும் வெள்ளிக்கிழமை மாலை மாவட்ட ரீதியில் யாழ் மாநகரசபை மண்டபத்தில் மேலதிக மாவட்ட நீதிபதி திரு. ஆர். பரமகுரு தலைமையில் நடைபெறவிருக்கின்றது. உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம் பியுமான திரு. எம் சிவசிதம்பரம், சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம் ஆகியோர் விழாவில் பிரதமவிருந்தினர்களாக கலந்து கொள்வர்.

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத்தினர் விழாவையொட்டி 'சமூகத் தொண்டன்' என்ற பெயரில் விசேஷ மலர் ஒன்றினையும் வெளியிடுகின்றனர். மலரில் சனசமூக நிலைய இயக்கம் பற்றியும் உள்ளூராட்சி வாரம், சம்பந்தமான கட்டுரைகளையும் கொடதாக அமைந்திருக்கின்றது.

விழாவை முன்னிட்டு வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் யாழ் விளையாட்டரங்கில் விளையாட்டுப் போட்டி சனசமூக நிலையங்களுக்கிடையே நடாத்தப்படவிருக்கின்றது. ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ள விளையாட்டு வீரர்களும், வீரமணிகளும் போட்டியில் கலந்து கொள்வர்.

இரவு கலாச்சார விழாவில் நாட்டுப் பாடல்கள், சங்கீதம், நாடகம், வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும்.


## மரண அறிவித்தல்

### செல்லையா ஆனந்தராஜா

U. K. கிளிமோர்கன் நுண்கலைக்கல்லூரி மாணவனும் முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக ஆய்வுக்கூட உதவியாளரும் யாழ்ப்பாணம் R. செல்லையா அன் கோவினதும் கொழும்பு பயனியர் மோட்டோர் ஸ்ரோஸ் ஆகிய ஸ்தாபனங்களின் உரிமையாளருமாகிய திரு. R செல்லையாவினதும் திருமதி செல்லையாவினதும் அன்பு மகனும், செல்வராணி, கமலாம்பிகை, லீலாவதி, துரைரத்தினம், மாமலர், திருநாவுக்கரசு, பத்மினி, கருணாநிதி ஆகியோரின் சகோதரரும், Dr. M. துரைரத்தினத்தின் மைத்துனரும் ஆகிய திரு. C. ஆனந்தராஜா காலமாகிவிட்டார். அன்னாரது பூதவுடல் யாழ்ப்பாணம் மகாத்மா காந்திவீதி, (இல 8) காந்தி இல்லத்திலிருந்து 14-2-70 சனிக்கிழமை பி. ப. 4 மணிக்கு தகனக்கிரிகைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். நண்பர்களும் உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

1953



## ஈழநாடு

வாரமலர்

(14-2-70)

சமநீதி
(சிறு கதை)

லெனின் வாழ்க்கை
(அருமையான நாடகம்)

நம் நாட்டுக் கலைஞர்
கைதடிப் பழநி
(சுவையான பேட்டி-
கலை அரங்கம்)

அம்புலிப் பாதை
என்ன நேர்கிறது
(சந்திரப் பயணத்தில்)

தந்தை தனயனை
நடத்தும் முறை
(குடும்பச் சுடர்)

ஆங்கில நாவலாசிரியர்
சார்ள்ஸ் டிக்கன்ஸ்

கடற் காற்றும்
பொன்னும்

இலக்கியத்திற்குச்
சமயநோக்கு
அளிக்கலாமா?

பாரதி கண்ட பாவையர்
(சங்கமத்துறை)

இவை தவிர
வாரசாரம் போன்ற
வழமையான அம்சங்களும்
வெளிவரும்


## உபசபாநாயகருக்கு பிரதமர் பதில்

வல்வெட்டித்துறையில் இராணுவம் தாக்குதல் நடத்தியது பற்றியும் பருத்தித்துறைப் பிரதிநிதி தாக்கப்பட்டது பற்றியும் உபசபாநாயகரும் உடுப்பிட்டிப் பிரதிநிதியுமான திரு. எம். சிவசிதம்பரம் பிரதமர் திரு டட்லி சேனநாயக்காவுடன் தொடர்பு கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார். இராணுவத் தளபதி யாழ்ப்பணத்துக்குச் சென்று நிலைமையை நேரில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பாரென்றும் அதன் பின் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் பிரதமர் தெரிவித்திருக்கிறார். பிரதமருடன் தொடர்பு கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலத்தையும் திரு. மு. சிவசிதம்பரத்தையும் வல்வெட்டித்துறை தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணியும் மற்றும் பலரும் தந்தி மூலம் கேட்டிருந்தனர்.

## ஆட்சிமன்றத்தில் தமிழரசார் கேட்பர்

இம்மாதம் 24-ம் திகதி ஆட்சிமன்றம் கூடும்பொழுது தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகள் வல்வெட்டித்துறை இராணுவத் தாக்குதல்பற்றியும் பருத்தித்துறைப் பிரதிநிதி தாக்கப்பட்டதுபற்றியும் சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீது கிளப்பவிருக்கின்றனர் வல்வெட்டித்துறையிலிருந்து இராணுவத்தினரை அகற்ற வேண்டுமென்றும் அவர்கள் கேட்கவிருக்கின்றனர்.

## பருத்தித்துறை எம். பி. பிரதமருக்கு தந்தி

இராணுவத் தாக்குதலினால் பாதிக்கப்பட்டு ஆஸபத்திரியில் சிகிச்சைபெற்று வரும்பருத்தித்துறைப் பிரதிநிதி திரு. கே. துரைரத்தினம் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுக்கு அனுப்பியுள்ள ஒரு தந்தியில் நடந்த சம்பவங்களை விவரமாகத் தெரிவித்தது விட்டு வல்வெட்டித்துறை மக்கள் பீதியடைந்துள்ளன ரென்றும் இச்சம்பவம்பற்றி பகிரங்க விசாரணை செய்யவேண்டுமென்றும் கோரியிருக்கிறார்.

சபாநாயகருக்கு அனுப்பியுள்ள ஒரு தந்தியில் ஆட்சிமன்ற உறுப்பினர் ஒருவரின் கௌரவத்தையும் ஆட்சிமன்ற சம்பிரதாயத்தையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

இராணுவத்தாக்குதல் பற்றி வட்டுக்கோட்டைப் பிரதிநிதியும் தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளருமான திரு. அ. அமிர்தலிங்கம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் மன்னார், வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ள சம்பவங்கள் இப்பகுதிகளிலிருந்து இராணுவத்தை அகற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளதென்று கூறியிருக்கிறார். பொலிசாருக்குப் போல் இராணுவத்தினருக்கு இலக்கங்கள் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைக்கு இனியாவது அரசாங்கம் செவிசாக்குமென்று அவர் நம்பிக்கையும் தெரிவித்திருக்கிறார் கள்ளக்கடத்தல் சட்டவிரோதக்குடியேற்றம் என்ற சாட்டில் தமிழ்பிரதேசங்களில் மக்களை அடக்கிஒடுக்கிததற்கு இராணுவம் உபயோகிக்கப்படுகிறதென்றும் அவர் தமது அறிக்கையில் கூறியிடுக்கிறார்.

## வேலை நிறுத்தம்

யாழ்யாணம், வெள்ளி

களுத்துறை தபால் ஊழியர்கள் அனைவரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இதர தபால்நிலையங்களைச் சேர்ந்த ஊழியர்களையும் வேலைநிறுத்தத்துக்குத் தயாராகுமாறு அஞ்சல் தொலைபேசி தொடர்புச்சங்கம் கேட்டுள்ளது

கவும் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனும், பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவுடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கிக்கூறினர். உடன் தகுந்த நடவடிக்கை எடுப்பதாகப் பிரதமர் தெரிவித்ததுடன் இச்சம்பவத்துக்குத் தமது வருத்தத்தையும் தெரிவித்துக்கொண்டார்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள திரு. துரைரத்தினத்திற்கு இன்றும் வலிநீங்காவிட்டால் இன்று எக்ஸ்ரே படம்பிடித்து பரிசோதிக்கப்படவிருக்கிறது.

### விசாரணை

இராணுவத் தாக்குதல்பற்றிய புகார் சம்பந்தமாக பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். இன்று பிற்பகல் 4 மணியளவில் வல்வெட்டித்துறை இன்று காலை விசேஷவிமானத்தில் வந்து சேர்ந்த இராணுவத்தளபதி மேஜர்ஜெனரல் சேபால அட்டிகல வடபகுதிப் பொலிஸ் சுப்ரின்டென்ட் திரு ஆர் சுந்தரலிங்கத்துடனும் சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்புப்பிரிவுப்பொலிஸ் உதவி அதிபர், காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் ஆகியோருடனும் வல்வெட்டித்துறை இராணுவமுகாம் தளபதியுடனும் ஆலோசனை நடத்தினார். இராணுவ முகாமுக்கும் சென்று அவர்பார்த்தார்.

வல்வெட்டித்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் எவரும் வெளியே செல்லத்தடை விதிக்கப் பட்டிருக்கிறது. வல்வெட்டித்துறையில் பொலிஸ் பாதுகாப்பும் ரோந்துக் காவலும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

## மாணவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாக பொலிசார் உறுதி

இராணுவத்தாக்குதல் நடந்த பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுப்ப அச்சமடைந்துள்ளதாக பெற்றோர் சிலர் வடபகுதி வித்தியாதிபதிக்குத் தந்தி மூலம் அறிவித்திருந்தனர். இதுபற்றி வித்தியாதிபதி வடபகுதிப் பொலிஸ் அதிபருக்குத் தெரிவித்தார். பொதுமக்களுக்கும் குறிப்பாகப் பாடசாலை மாணவர்களுக்கும் போதிய பாதுகாப்பு அளிக்கப்படுமென்றும் மாணவர்களிடம் தலையிடும் எவர்மீதும் உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் உறுதியளித்திருக்கிறார். பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி வல்வெட்டித்துறைப்பொலிசாருக்கு அவர் உத்தரவிட்டிருக்கிறார்.

—

ஊரதீவு, வியாழன்

தமிழர் சுயாட்சிக் கழகத்தின் பிரசாரக் கூட்டமொன்று புங்குடுதீவு இரண்டாம் வட்டாரத்தில் இம்மாதம் 17-ந் திகதி நடைபெறவிருக்கிறது. கழகத் தலைவரும், ஊர்காவற்றுறைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினருமான திரு. வ. நவரத்தினம் உட்படப் பலர் உரையாற்றுவர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 09 | U | 0625 | 05 | C | 0106 |
| 28 | F | 0321 | 03 | H | 0669 |
| 04 | W | 0391 | 40 | A | 0229 |
| 19 | L | 0385 | 27 | T | 0140 |
| 40 | H | 0373 | 14 | L | 0683 |
| 42 | P | 0022 | 13 | L | 0536 |
| 33 | V | 0821 | 32 | B | 0910 |
| 08 | N | 0877 | 16 | L | 0719 |
| 22 | Q | 0906 | 14 | V | 0238 |
| 38 | C | 0754 | 41 | H | 0277 |
| 34 | M | 0405 | 41 | D | 0937 |
| 42 | T | 0438 | 04 | G | 0371 |
| 02 | G | 0787 | 34 | S | 0038 |
| 36 | X | 0014 | 21 | O | 0424 |
| 24 | H | 0745 | 31 | R | 0126 |
| 31 | M | 0056 | 43 | S | 0034 |
| 21 | G | 0103 | 29 | B | 0546 |
| 10 | K | 0244 | 43 | C | 0089 |
| 09 | T | 0947 | 35 | H | 0797 |
| 30 | F | 0882 | 09 | A | 0534 |
| 05 | W | 0646 | 17 | U | 0778 |
| 31 | D | 0385 | 02 | C | 0810 |
| 20 | O | 0041 | 29 | C | 0956 |
| 42 | S | 0496 | 02 | A | 0851 |
| 02 | D | 0974 | 33 | G | 0432 |
| 02 | S | 0814 | 18 | U | 0906 |
| 41 | U | 0652 | 06 | H | 0530 |
| 19 | F | 0773 | 24 | T | 0434 |
| 10 | J | 0195 | 05 | N | 0705 |
| 30 | J | 0910 | 42 | W | 0274 |
| 06 | U | 0377 | 12 | M | 0896 |
| 31 | E | 0131 | 15 | P | 0795 |
| 34 | L | 0975 | 17 | B | 0870 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.)

## திருட்டு

கோப்பாய், விய

கோப்பாய் மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பண்டசாலையில் திருட்டுப் போயுள்ளதாக கோப்பாய் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

# எதிர்க்கட்சித் தலைவர்களுடன் இந்திரா ஆலோசனை

## சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு பற்றி ஆராய்வர்

புதுடில்லி, பெப் 12

வங்கிகள் தேசஉடைமையாக்கப்பட்டது. சம்பந்தமானசட்டம் செல்லுபடியாகாதெனசுப்ரீம்கோட் அளித்துள்ள தீர்ப்பின்காரணமாக எழுந்துள்ளநிலைமைகள் குறித்து ஆலோசிப்பதற்காக எதிர்க்கட்சித் தலைவர்களை பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி ஒரு மகாநாட்டுக்கு அழைத்திருக்கிறார்.

ஏற்கனவே திரு. ஜெகஜீவன்ராம் தலைமையில் நடைபெற்ற சகலகட்சி மாநாடொன்றில் தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து கட்சித்தலைவர்கள் ஆராய்ந்தனர். நாட்டிலுள்ள எல்லா வங்கிகளையும் தேச உடைமையாக்க வேண்டும் என்று பலர் வற்புறுத்தினார்கள்.

தி. மு. க. தலைவர் திரு. அன்பழகன் பேசுகையில் அவசியமானால் சகல வங்கிகளும் தேசியமயமாக்கப்படவேண்டும் என்றும் அப்படியான நடவடிக்கை ஏதும் எடுக்கப்படும்போது திராவிட முன்னேற்றக்கழகம் அதற்கு தனது பூரண ஆதரவைக் கொடுக்கும் என்றும் குறிப்பிட்டார்.

பூனாவில் ஒரு கூட்டத்தில் உள்துறை அமைச்சர் திரு. சவான் பேசும்போது சுப்ரீம் கோர்ட் வங்கிகள் தேச உடைமையாக்கப்பட்டது. செல்லுபடியாகதென அறிவித்துவிட்ட போதிலும் மக்களைப்பொறுத்தவரை வங்கிகள் தேசஉடைமையாக்கப் பட்டதை ஏற்றுக்கொண்டு விட்டதாக என்று குறிப்பிட்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய மின்சார ஜேர்மன் கூட்டல் மெஷின் (Adding Machine) விற்பனைக்குண்டு. தேவையானோர் நேரில் வரவும். நாகராஜன். 2, முதலாவது ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 1843

ராசாவின் தோட்டத்தில் நாவலர்றேட் சந்தியில் முன்பக்கம் பாதை வசதியுள்ள இடத்தில் பனந்தோப்புடனும் கிணற்றுடனும் கூடிய ஐந்தரைப்பரப்புக்காணி உடனடியாக விற்பனைககுண்டு தொடர்புகொள்ளவும் 60, புங்கங்குளம்வீதி, தபால் பெட்டி இல. 47, யாழ்ப்பாணம். 1846

காணி

4 1/2 பரப்பு, சிறியவீடு, கக்கூஸ், கிணற்றுப் பங்கு, பிரதான வீதி, மின்சாரம், பஸ் வசதி, சண்டிலிப்பாய் தெற்கு ஆங்கிலவித்தியாசாலைக்குக்கிட்ட, டிஸ்பென்சரி பக்கத்தில், ரூபா 10,000, டாக்டர் திருவிளங்கம், டெமற்றக்கொட. 1837

நல்ல நிலையிலுள்ள CN A/40 கார் விற்பனைக்குண்டு. குணசிங்கம் ஆலடி கருச், ஆனைக்கோட்டை. 1848

### கல்வி

வட்டுக்கோட்டையிலும் சித்தங்கேணியிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் வர்த்தகக் கல்லூரிகளில் சிங்களம், ஆங்கிலம், சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணிதம், கணக்குப்பதிவியல் ஆகிய பாடங்கள் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் அல்லது ஆசிரியைகள் தேவை. அதிபர், வர்த்தகக் கல்லூரி, வட்டுக்கோட்டை. 1835

### தேவை

யாழ்ப்பாணம் பெரிய கடையில் நன்முறையில் இயங்கும் ரேடியோ திருத்தலும், உதிரிப்பாக விற்பனையும் செய்யும் ஸ்தாபனத்திற்கு (பில் கிளார்க்) லிகிதர் பதவிக்கு 20-30 வயதிற்கு உட்பட்ட பெண்பாலார் மட்டும் தனது சொந்தக் கையெழுத்தில் 'ஆங்கில அறிவு முக்கியம். யாழ்ப்பாணம் வசிப்பிடமாக உள்ளவர் விரும்பத்தக்கது.' விண்ணப்பிக்கவும். விளம்பர இல 1830, 'ஈழநாடு' மேற்பார்த்து, யாழ்ப்பாணம். 1830

ஆண்கள் அல்லது பெண்கள் யாழ்ப்பாண ஸ்தாபனத்துக்கு:- க. பொ. த. வில் ஆங்கிலம், கணித பாடங்களும், 25 வயதுக்கு உட்பட்டவர்கள். கட்டிடப் பகுதி, படம் அல்லது கணக்குப் போடும் அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புவோரும் இம் மாதம் 20-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 1824, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் 1824

வட்டுக்கோட்டையில் இயங்கும் சாந்தி அரிசி ஆலைக்கு அனுபவம்வாய்ந்த மனேஜர் தேவை. பிணைப் பணம் கட்டவேண்டும், உரிமையாளர், சாந்தி அரிசி ஆலை, வட்டுக்கோட்டை. 1834

வீடு

தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கு அருகாமையில் அல்லது புது ஆஸ்பத்திரிக்கருகாமையில் ஒரு வீடு தேவை தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 1839, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1839

தையல் வேலைக்கு வெட்ட பூப்போடத் தெரிந்த பெண் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். ரொலறம்ஸ், 46, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 1847

### தேவை

பெண்ணின்சுலா கண்ணாடித் தொழிற்சாலைக்கு வெட்டுதல் (Cutting) & மட்டப்படுத்துதல் (Grinding) ஆகிய இரு பகுதிகளுக்கும் ஆண்கள், பெண்கள் தேவை. தேர்ச்சிபெற்றவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும். சின்னத்துரை ஏஜன்சீஸ் அன் டிஸ்றிபியூட்டேஸ், 25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1812

### விற்பனையாளர் தேவை

வலி-மேற்கு ப. நோ. கூ. ச. சமாசத்தின் விசைத்தறி நெசவாலையில் உற்பத்தியாகும் செயற்கைப்பட்டுத் துணிகளை வெளியூர்களில் சென்று விற்பனைசெய்வோர் தேவை. துணி விற்பனை அனுபவமுடையோர் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பம் 20-2-70-ம் திகதிக்கு முன்பு கீட்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

தலைவர்
வலி-மேற்கு ப. நோ. கூ. ச. சமாசம், சங்கானை.
11-2-70. 1950

### கேள்வி விளம்பரம்

வலிகாமம் மேற்கு கூட்டுறவுச் சமாசத்தின் நெசவாலையில் அறுபதினாயிரம் பெறுமதியான கட்டிடம் கட்டுவதற்கு கீட்காணும் ஒப்பந்தங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 22-2-70-ம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

1. கட்டிடத் தேவைக்கான மண்கும்பான் மணல், கல் சறளை ஆகியன.
2. மேசன் கூலி வேலை.
3. மரம், கூரைவேலை, மேற்கண்டவற்றுக்கு விண்ணப்பிப்போர் சமாசத்தில் வந்து விபரம் பெற்று கீட்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.
4. கட்டிட மேற்பார்வையாளர் ஒருவர் தேவை. அனுபவம் உடையவர் நாட்கூலிக்கு அலுவல் பார்க்க விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.

தலைவர்
வலி-மேற்குப. நோ. கூ. ச. சமாசம், சங்கானை.
11-2-70. 1951

## பெண் அதிகாரி புகலிடம்

மெக்ஸிக்கோசிட்டி, பெப் 12

மெக்ஸிக்கோவில் உள்ள சோவியத் தூதரகத்தில் வர்த்தகப்பிரிவில் கடமையாற்றிவந்துள்ள பெண்ராஜதந்திரி ஒருவர் மெக்ஸிக்கோ அரசிடம் புகலிடம் கேட்டிருக்கிறார். அவர் இங்கு வேலைக்கு வந்து ஒருதினமே கழிந்திருக்கிறது.


ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30 மணி
ஜெமினி — ராகினி
நடித்த
ஏழைப்பங்காளன்



ராஜா (யாழ்ப்பாணம்)
(தினசரி 3 காட்சிகள்)
பிறிபோயா, போயா 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் - ராஜஸ்ரீ
நடித்த


### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் பதவி வெற்றிடம்

ஆண்

வடிகால்/உலொறிக்

# இன்றைய பலன்

மாசிமாதம் 2-ம் திகதி [13-2-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்-** துன்பத்தின் ரேகைகள் நிழலாட்டம்போடும். துணைவரின் உடல்நலம் கெடும். பணமும் பெருமளவில் செலவாகும்.

**ரிஷபம்-** இன்னலின் பின்னலால் இதயம் வேதனைப்படும் வீட்டில் வைத்தியச் செலவுகள் அதிகரிக்கலாம். நண்பர்களுக்கு மத்தியில் அபிப்பிராயபேதம் தோன்றக்கூடும். உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

**மிதுனம்-** மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம். கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு. தாய்வழி ஆதரவு தாராளமாக கிடைக்கும். வாகன நலனுக்கும் இன்று இடமுண்டு.

**கடகம்-** சிந்தனை அலைகள் மோதும். செய்தொழிலில் பதட்டநிலை தென்படும். அவசரமுடிவின் மூலம் குறைகேட்கநேரிடும். பலவழிகளிலும் பணம் விரயமாகும். உடல்நலத்தைப் பேணிக்கொள்ளவும்.

**சிம்மம்-** பொன்னான சந்தர்ப்பம் இன்று கிடைக்கும். திறமைக்கு முதலிடம் உண்டு. பெரியவர்களின் ஆதரவு கிடைக்கும். இதயச்சுமை அகலும் தொழில்துறையில் புதிய வெற்றிகளும் உண்டு.

**கன்னி-** மனதில் அமைதி குன்றும். எதிரிகள் எக்காளமிடுவர். மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும். அமைதியே நன்று அறிவுக்கு நலம் உண்டு

**துலாம்-** ஒளிக்கதிர்கள் உங்கள் வாழ்க்கையில் பரவும். உல்லாசமாகப் பொழுதுபோக்க விரும்புவீர்கள். குழந்தைகளினால் மகிழ்ச்சி உண்டு. கணவன் மனைவி மத்தியில் அன்பு தவழும்.

**விருச்சிகம்-** செய்தொழிலில் தளர்ச்சி ஏற்படும். சதி செய்வதற்கு சகாக்களே சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர் பிரயாணத்தை தவிர்க்கவும். இறை நம்பிக்கை நன்று.

**தனுசு-** உறவுமுறைகள் பலப்படும். உற்சாகம் பெருகும். புதிய நண்பர்கள் புடைசூழ்வர். வாழ்த்தும் உண்டு.

**மகரம்-** வெற்றிப்பாதையில் வீறுநடைபோடுவீர்கள். தொழில்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். எதிரிகள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும் சுபதினம்.

**கும்பம்-** பொதுத்துறையில் நாட்டம் பிறக்கும். மக்களின் ஆதரவு கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு பிறக்கும். பொன்னான நாள்.

**மீனம்-** உறவுமுறைகளில் வெடிப்பு ஏற்படும். பண விவகாரத்தின் மூலம் பகை தோன்றலாம். தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 13—2—70

செய்திகள்: காலை 6-45, 8-00, 8-30.
பகல் 12-00, 12-45, 1-30.
மாலை 4-25, 5-00, 6-00.
இரவு 7-00, 8-00, 9-00, 10-30.
திரைகானம்: காலை: 7-45 பகல் 12-03, 1-00, இரவு: 7-45, 10-00
இரவு: 7-15 வயலின், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம்.

கிரிக்கெட்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### இருதரப்பும்

## பச்சிலைப்பள்ளி விளையாட்டுச் செய்திகள்

பச்சிலைப்பள்ளி, வெள்ளி

வடமராட்சி வடக்கு கிழக்கு காரியாதிகாரி பிரிவுகளின் சுதந்திரதின விழா விளையாட்டுப்போட்டி குடத்தனை கிராமசபைவிளையாட்டு மைதானத்தில் அம்பன் அரசினர் வைத்தியசாலை அதிபர் திரு. கே. குணரத்தினம் தலைமையில் நடை பெற்றது. வடமராட்சிக்கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். தேவசகாயம் தேசியக் கொடியை ஏற்றி வைத்து விழாவை ஆரம்பித்து வைத்தார். போட்டி முடிவுகள்

### விரிவுரை

சுழிபுரம், வெள்ளி

நாவலர் பெருமான் கந்தபுராண சபையினரின் வேண்டுதலை ஏற்று வழக்கம்பறை சன சமூக பஜனைச்சபையினரால் வழக்கம்பறை அம்மன் கோவில்மண்டபத்தில் மாலை 6-30 மணிக்கு கந்தபுராண பாரம் கொண்டாடப்படும். திரு. த. மயில்வாகனம் கந்தபுராண மகிமை பற்றி விரிவுரையாற்றுவார்.

வல்வையில்

### புதிய பாடசாலை அமைக்கப்படும்

வல்வெட்டித்துறை, வியா.

வல்வெட்டித்துறை கிழக்கில் சுமார் 500 மாணவர்கள் கல்வி கற்று வருவதற்கான புதிய பாடசாலைக் கட்டிடங்கள் கட்டப்பட விருக்கின்றன. இப்பகுதிலுள்ள பல வர்த்தகப் பிரமுகர்கள் இதற்குரிய பணத்தைக்கொடுப்பதற்கு முன்வந்துள்ளனர். இதற்கான அடிக்கல் நாட்டுவிழா விரைவில் நடைபெறவிருக்கிறது.

### "வரியிறுப்பாளர் ஒத்துழைப்புத் தேவை"

மானிப்பாய், வியாழன்

மானிப்பாய் பட்டினசபை ஆதனங்களின் விலைமதிப்பை அதிகரித்தும் வரியைக்கூட்டியும் வருவதனால் ஏழைகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதை எதிர்க்க 1959-ம் ஆண்டு நிறுவப்பட்ட வரியிறுப்பாளர் சங்கம் வரியிறுப்பாளர்களின் ஒத்துழைப்பின்மையால் காரியங்களைச்சாதிக்க முடியவில்லை. இவ்வித வரி அதிகரிப்பு முதலியவற்றை ஒழிக்க இனிமேலாவது வரியிறுப்பாளர்கள் ஒத்துழைக்க முன்வரவேண்டும்."

இவ்வாறு மானிப்பாய்ப்பட்டினசபை வரியிறுப்பாளர் சங்கத்தின் 11 வது ஆண்டு விழாவிற் திரு. கே. எஸ். சௌந்தரநாயகம் பேசுகையில் குறிப்பிட்டார் சபையின் விருமானம் பலவிதங்களிலும் அதிகரித்துள்ளதால் வரி முதலியவற்றைக்குறைக்க சபைக்கு வாய்ப்பு இருப்பதாக அவர்சொன்னார். இவ்விழாவுக்கு திரு. க. செல்வநாயகம் தலைமை வகித்தார். திருவாளர்கள்: டபிள்யூ ஜீ. அன்னப்பா, என். சிவநேசன் வி. இராசதுரை, ரி. வி. சுப்பிரமணியம், ஏ. மதியாபரணம் ஆகியோர் உரையாற்றினர்.

### "தமிழருக்கு விமோசனம்"

மாவிட்டபுரம், வியா

"தமிழர் மத்தியில்

# செய்திச் சுருக்கம்

### 100 டன் அரிசி நன்கொடை [illegible]

இலங்கையில் வெள்ள அகதிகளுக்கு [illegible] நிவாரணம் அளிப்பதற்காக பர்மா அரசாங்கம் 100 டன் அரிசி நன்கொடை [illegible] வழங்கியுள்ளது.

### மலேசிய இலங்கையர்

மலேசியாவில் புதிதாகக் கொண்டுவரப்பட்ட தொழிற் கட்டுப்பாட்டுச் சட்டத்தினால் தொழில் வாய்ப்பற்று நிர்க்கதிக்குள்ளாகியிருக்கும் இலங்கையர் நிலைமை குறித்து மலேசிய அரசாங்கத்துடன் உத்தியோகபூர்வமாகப் பேச்சுவார்த்தை நடத்த கோலாலம்பூரில் உள்ள இலங்கைத் தூதுவர் திரு. ஜே. சி. எல். ரத்வத்தை நடவடிக்கை மேற்கொண்டுவருகிறார்.

### இளைஞருக்குப் பயிற்சி

அகில இலங்கை வை. எம் எம். ஏ. இயக்கத்தினர் இளைஞர்களுக்கான பயிற்சி மன்றம் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றனர் வை. எம். எம். ஏ. இயக்கத்தின் கிளைகளிலுள்ள அங்கத்தவர்களுக்கும், இஸ்லாமிய இயக்கங்களிலுள்ள அங்கத்தவர்களுக்கும் இங்கு பயிற்சியளிக்கப்படும் இம்மாதம் 26ந் தேதிவரை வெலிமடையில் உள்ள இளைஞர் பயிற்சி மன்றத்தில் இவ்வகுப்புகள் நடைபெறும்.

### இலங்கை வந்துள்ளார்

இலங்கையில் மலேஷிய ஹைகமிஷனராகக் கடமையாற்றுவதற்கு தெங்கு இந்த்திரா பெத்ரா இலங்கை வந்துள்ளார். பத்து ஆண்டு காலம் மலேஷியப் பாராளுமன்ற உறுப்பினராகப் பணி புரிந்த இவர் யப்பானிலும், பாகிஸ்தானிலும் மலேசியத் தூதுவராகவும் கடமையாற்றியிருக்கிறார்.

### புதிய கட்சி

'கிறிஸ்டியன்சோஷலிஸ்ட் கட்சி' என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு வருகிறது. கிறிஸ்தவர்களின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இக் கட்சி அமைக்கப்படுகிறது.

இக் கட்சியின் ஸ்தாபகர்களின் முக்கியமான ஒருவர் இக் கட்சி மொரட்டுவையிலிருந்து புத்தளம்வரையிலும், யாழ்ப்பாணம் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலும் பன்னிரண்டு தேர்தல் தொகுதிகளில் தனது அபேட்சகர்களை நிறுத்தும் என்று

### 19 இடங்களில் போட்டி

எதிர்வரும் பொதுத்தேர்தலில் லங்கா சமசமாஜக் கட்சி 19 தொகுதிகளில் போட்டியிடுமெனத் தெரிகிறது.

### நீதவான்முன்னிலையில் தாக்கினாராம்

கொழும்பு நீதிமன்றசமீபகால சரித்திரத்தில் ஏற்படாத ஒரு சம்பவம் இடம் பெற்றுள்ளது. கூண்டிற்கு அழைத்துச் செல்லப்பட்ட கைதி எம். பாருக் என்பவர் நீதவான் முன்னிலையில் கொண்டுவரும் போது தன்னை அழைத்துவந்த பொலிஸ்காரரைப் பாய்ந்து தாக்கினாராம்.

### சமரச முடிவுகாண மகாநாடு

மடகும்புரதோட்டதொழிலாளர் வேலைநிறுத்தம் சம்பந்தமாக சமரச முடிவு காணும் பொருட்டுதொழில் அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது நேற்று ஒரு மகாநாட்டைக் கூட்டினார்.

### இலங்கைக்கும் அழைப்பு

நடுநிலைமை நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மகாநாட்டை எதிர்வரும் ஏப்ரல்மாதம் 4-ம் திகதி தன்ஸானியாவின் தலைநகரான டாராஸலத்தில் நடத்துவது என முன்னர் தீர்மானிக்கப்பட்டது. இம்மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு இலங்கையும் அழைக்கப்பட்டுள்ளது.

### பென்சன் நஷ்டஈடு

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் தாயகம் திரும்பும் சலவை சலூன்தொழிலாளர்களுக்கு பென்சன் நஷ்டஈடு ஆகியவற்றைத் தோட்ட நிர்வாகம் வழங்க வேண்டும் என்று கோரும் தீர்மானத்தை தேசிய சலவை சலூன் தொழிலாளர் காங்கிரஸ் நிறைவேற்றியது.

### நீர்ப்பாசன வசதி

குருநாகல் மாவட்ட சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்காக 13 லட்சம்ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 20 ஆயிரம் ஏக்களுக்கு நீர்வசதியளிக்கவும், 250 பழையகுளம், கால்வாய்களைத் திருத்தவும் நீர்ப்பாசனத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

அசைஸ்

பிரிபோயா, போயா 4 காட்சிகள்

# டில்லி மாப்பிள்ளை

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா அசோகன் - சோ - சந்திரபாபு நடித்த

# அடிமைப் பெண்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

## வெலிங்டன் யாழ்ப்பாணம்


தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 ம ணி.

தமிழ்நாட்டில் மக்கள் மத்தியில் புதிய சாதனையை ஏற்படுத்திய மாபெரும் வண்ணத்திரை ஓவியம்.

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்று ‘‘பேசும்படத்தின்’’ மூன்று விருதுகள் பெற்ற வெற்றிச்சித்திரம்

(1) சிறந்தபடம் (2) சிறந்த நடிகர் (சிவாஜி) (3) சிறந்த உபநடிகர் (பாலையா)

நாதஸ்வர இசை: மதுரை சேதுராமன் - பொன்னுச்சாமி சகோதரர்கள்





## சிவாஜிகணேசன் பத்மினி

பாலையா

நாகேஷ்

நம்பியார்

ஏ.வி.எம். ராஜன்

மனோரமா

மற்றும்பலர் நடித்த



சிவாஜிகணேசன் அளிக்கும்

ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்

# தில்லானா மோகனாம்பாள்

A. P. நாகராஜன்


## பதவி வெற்றிடம்

### ஆண் வடிகால்/உலொறித் தொழிலாளர் பதவிகள்

இம்மன்றத்தின் சுகாதாரப்பகுதியில் மாற்றுள் வடிகால்/உலொறித் தொழிலாளர்களாகக் கடமை புரிவதற்கு திடகாத்திரமும் நல்ல உடல் நலமும் உள்ள 20 வயதுக்கும் 45 வயதுக்கும் உட்பட்ட ஆண் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வேதனம்:- சகல படிகளும் உட்பட நாளொன்றுக்கு ரூ. 5-18 சதம் வேதனமாக வழங்கப்படும்.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது வயதை நிரூபிப்பதற்கான அத்தாட்சிப் பத்திரப் பிரதியுடன் எழுத்து மூலமாக யாழ்ப்பாண மாநகராட்சிமன்றச் சுகாதார வைத்திய அதிகாரிக்கு 25-2-70ம் திகதி புதன் கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாக கிடைக்கும்படி தமது விண்ணப்பங்களை பதிவு அஞ்சல் மூலமாக அனுப்புதல் வேண்டும்.

ஏ. ரி. சுந்தரம்
மாநகராட்சி மன்ற ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
11-2-70. 1952


வல்வெட்டித்துறை

## றஞ்சனா தியேட்டர்

தினசரி: 6-30, 9-30

ஜெமினி — சாவித்திரி நடித்த

ஹலோ மிஸ்டர் ஜமீன்தார்

## வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி: 6-30, 9-30

பிரிபோயா, போயா 2-30 மணி

எம். ஜி. ஆர்-சரோஜாதேவி நடித்த

பெரிய இடத்துப் பெண் (புதிய கொப்பி)

**REGAL JAFFNA**

Daily 10-30 4-45, 7 & 9-45

Jim Brown, Diahann Carroll in THE SPLIT (ad ...)


கிரிக்கெட்

## இருதரப்பும் சமமுடிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

வட்டுக்கோட்டை பட்டதாரி மாணவர்கள் கிரிக்கெட் கோஷ்டிக்கும், ‘சேவியர் லெவின்’ கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ‘சேவியர் லெவின்’ கோஷ்டி எல்லா விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 136 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எஸ். டி குலநாதன் 70 ஓட்டங்களைப் பெற்றார். ஸ்ரீதரன் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பட்டதாரி மாணவர்கள் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 54 ஓட்டங்களைப் பெற்றது. எஸ். டி. குலநாதன் 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், சூரியகுமார் 30 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

‘சேவியர் லெவின்’ 2-வது இன்னிங்ஸில் 4 விக்கெட்கள் நஷ்டத்துக்கு 136 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை முடித்துக் கொண்டது. இதில் டி. புரட்சிதாசன் 57 ஓட்டங்களையும், சூரியகுமார் 47 ஓட்டங்களையும் பெற்றனர்.

பட்டதாரி மாணவர்கள் கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 126 ஓட்டங்களைப் பெற்றது. பி. எஸ் செல்லையா 51 ஓட்டங்களைப் பெற்றார். (தே. நி)

## பட்மின்டன் சங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாவட்ட பட்மின்டன் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 24-ம் திகதி யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (தே. நி)


**MANOHARA JAFFNA**

Daily 4-45, 7 & 9-45 p.m

PrePoya, Poya 4 Shows

Don Murray, Dornald Houstan

THE VIKING QUEEN (color) (20th centuary Fox present)


... திரு. எஸ். தேவசகாயம் தேசியக் கொடியை ஏற்றி வைத்து விழாவை ஆரம்பித்து வைத்தார். போட்டி முடிவுகள் வருமாறு:-

கரபந்தாட்டம் - குடத்தனை உதயசூரியன் கோஷ்டி, கயிறு இழுத்தல் - குடத்தனை உதயதாரகை கோஷ்டி, கபாடி - பருத்தித்துறை துள்ளும் மீன் கோஷ்டி, மல்யுத்தம் - ஏ. டேவிற் அன்ரனி, பருத்தித்துறை இன்னுசியம் கழகம்; அ. புவனேந்திரன் பருத்தித்துறை இன்னுசியம்கழகம்; தே. தேவராசா பருத்தித்துறை துள்ளும்மீன் கோஷ்டி. முட்டியுடைத்தல்- ஆ. சிறிஸ்கந்தராசா, நகார் கோவில்வெண்மதிவிளையாட்டுக்கழகம்.

மேற்படி போட்டிகளுக்கு வடமராட்சிப்பகுதி விளையாட்டு உத்தியோகத்தர் திரு. சு கதிர்காமத்தம்பி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். போட்டியில் வெற்றியீட்டியோருக்கு திருமதி கே. குணரத்தினம் பரிசில்கள் வழங்கினார். வைத்திய அதிபர் திரு. கே. குணரத்தினம், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ் தேவசகாயம் முன்னாள் கிராம சபைத் தலைவர் நீ யோ. மரியாம்பிள்ளை ஆகியோர் உரை நிகழ்த்தினர். நாகர்கோவில் கிராமசேவையாளர் திரு பி. அ. செலஸ்தீன் நன்றியுரைவழங்கினார்.

## தாளையடி வெற்றி

யாழ். மாவட்ட சனசமூக நிலைய சமாசத்தினால் நடாத்தப்பெற்று வரும் கைப்பந்தாட்டப்போட்டியில் தென்மராட்சிப்பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட மட்டுவில் வடக்கு மோகனதாஸ் சனசமூகநிலைய கோஷ்டிக்கும் பச்சிலைப்பள்ளிக்காரியாதிகாரி பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட தாளையடி சென் அன்ரனிஸ் சனசமூக நிலையக் கோஷ்டிக்குமிடையில் மாலை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் சென் அன்ரனிஸ் ச. ச. நிலையக்கோஷ்டி 2—1 ஆட்டத்தில் வெற்றி பெற்றது. சென் அன்ரனிஸ் கோஷ்டி இம்மாதம் 13-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் இறுதிப் போட்டியில் பங்கு பற்றவிருக்கிறது.

## பின்போடுமாறு வேண்டுகோள்

செம்பியன்பற்றுக் கிராம சபையினரால் நடாத்தப்பெறவிருக்கும் உள்ளூராட்சி வார விளையாட்டுப் போட்டியும் யாழ். மாவட்ட சனசமூக நிலைய சமாசத்தால் நடாத்தப் பெறும் கைப்பந்தாட்ட இறுதித் தெரிவுப்போட்டியும் இம்மாதம் 13-ம்திகதி நடைபெறவிருப்பதால் தாளையடி சென் அன்ரனிஸ் ச. ச. நிலையம் இரண்டுபோட்டிகளில் எதில்பங்குபற்றுவது என்ற சங்கடமான நிலை ஏற்பட்டுள்ளது. யாழ். மா. ச. ச. நிலையச்சமாசத்தினால் நடாத்தப்பெறும் இறுதித் தெரிவுப்போட்டியை இன்னுமோர்திகதிக்கு ஒத்திவைக்குமாறு சென் அன்ரனிஸ் கோஷ்டியினர் கேட்டுள்ளனர்.

## ... விமோசனம்’’

மாவிட்டபுரம், வியா

‘‘தமிழர் மத்தியில் இருந்து தீண்டாமை ஒழிந்தால்தான் தமிழர் விமோசனம் அடையலாம்’’ என்று அல்வாயில் நடந்த இலக்கிய விழா ஒன்றுக்குத் தலைமை தாங்கிப் பேசிய ஆசிரியர் தங்கவேல் கூறினார்.

அல்வாய் இளைஞர் இலக்கிய மன்ற ஆதரவில் அல்வாய் ஆனந்த சேமகே தமிழ்-சிங்கள பௌத்த பாடசாலையில் நடந்த இவ் இலக்கியவிழாவில் திரு. வன்னியசிங்கம், கே. டானியல் உட்படப்பலர் உரையாற்றினர். கலை. நாடக நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## புதுவருட நிர்வாகிகள்

புத்தூர், வியா

ஆவரங்கால் சாந்தி கலா நாடக மன்றம் திரு. க. திரவியம் தலைமையில்கூடி புதுவருட உத்தியோகஸ்தரைத் தெரிவுசெய்தது.

தலைவர்: க. திரவியம், உபதலைவர்: செ. தங்கராசா, செயலாளர்கள்: இ. மயில்வாகனம், வெ. மகாதேவா, பொருளாளர்கள்: க. க. சின்னராசா, சு. கி. சின்னராசன்.

ஐ. சதானந்தம், க. தம்பித்துரை, க. அரியகுட்டி, க. செல்லத்துரை, க. தம்பிராசா ஆகியோரைகொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## இடமாற்றம் ரத்து

மண்டைதீவு, வியா

மண்டைதீவு அரசாங்க வைத்திய சாலையில் பல ஆண்டுகள் கடமை புரிந்த வைத்திய அதிகாரி திரு. க. அப்பாத்துரையின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டது.

... லும், யாழ்ப்பாணம் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலும் பன்னிரண்டு தேர்தல் தொகுதிகளில் தனது அபேட்சகர்களை நிறுத்து மென்று கூறினார்.

## சிறை அதிகாரிகள் குறைபாடு

கடந்த பல வருடங்களாக சிறைகளிலிருந்து கைதிகள் தப்பியோடுவதற்குக் காரணம் சிறைக்காவலரின் எண்ணிக்கை அதிகரிக்காததே எனச் சிறைப்பகுதிச் சுப்பிரிண்டன் திரு. பீலிக்ஸ் ரத்நாயக்கா தெரிவித்தார்.

நாட்டிலுள்ள சிறைகளில் தற்போது 7500 கைதிகள் இருந்தபோதிலும் சிறைக்காவலர்களும், ஏனைய அதிகாரிகளுமாக 1300 பேர் மட்டுமே இருப்பதாகவும், வெலிக்கடைச் சிறையிலிருக்கும் 1600 கைதிகளைக் கண்காணிக்க 100க்கு குறைவான சிறை உத்தியோகத்தர்களே இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ‘ஆசிரியர்கள் சேவை’

மாவிட்டபுரம், வியா

‘‘ஆசிரியர் சேவை ஒரு மகத்தான சேவை. இச் சேவையை நல்ல முறையில் செய்தால்தான் மாணவர் என்றும் ஆசிரியர்களுக்கு மரியாதை கொடுத்து நடப்பார்கள் அப்படியாக இவ் இரு ஆசிரியர்களும் நடந்ததால்தான் இன்று இவர்கள் எல்லாராலும் மதிக்கப்படுகிறார்கள்’’.

இவ்வாறு மயிலிட்டி அமரிக்கன்மிஷன் பாடசாலையில் நடந்த இரு ஆசிரியைகளின் பிரிவுபசார விழாவில் பாடசாலை அதிபர் திரு. கா. கந்தையா கூறினார்.

இளைப்பாறும் ஆசிரியை திருமதி கந்தையா, உயர் படிப்புக்குச் செல்லும் திருமதி, அ பத்மநாதன் ஆகியோருக்கு பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

## குருநகர் கலைக்கதிர் மன்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். குருநகர் கலைக்கதிர் மன்றத்தின் புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: க: பிரான்சிஸ், உபதலைவர்: மு. தேவதாஸ், செயலாளர்: பொன் பொன்ராசா, உபசெயலாளர்: ப சூசைப்பிள்ளை, பொருளாளர்: அ. பெனடிக்ற்.

... நீர்ப்பாசனத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

அசைஸ்

## விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

நேற்று நடைபெறவிருந்த வட பகுதி அசைஸ் விசாரணை இம்மாதம் 15ம் தேதி காலைவரை ஒத்திபோடப்பட்டுள்ளது. நீதியரசர் சி. ஜி. வீரமந்திரி முன்னிலையில், விசாரணை நடைபெற்றது.

......

## சேக்கிழார் விழா

கோப்பாய், வியா

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தாரால் இம்மாதம் 13-ம் திகதி மாலை கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவில் மண்டபத்தில் சேக்கிழார் விழாவும் கந்தபுராணக் கருத்தரங்கும் நடைபெறவிருக்கிறது.

கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை தலைமையில் விழாநடைபெறும்

## ‘சின்னமடுப் பகுதியை காந்திக்கிராமம் ஆக்கவும்’’

ஊர்காவற்றுறை, வியா.

‘காந்தி நூற்றுண்டுவிழா ஞாபகார்த்தமாக சரவணை சின்னமடுப் பகுதியை காந்திக்கிராமமாக அமைத்துத் தரவேண்டும்’ என அரசினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்றை சரவணை கிராம முன்னேற்றச்சங்கம் சரவணை சனசமூகநிலையம் எனபன நிறைவேற்றியுள்ளன.

பலஆண்டுகாலமாகஅபிவிருத்திசெய்யப்படாமல் தாழ்ந்த பிரதேசமாகவே இருந்துவரும்சின்னமடு சேரிப்பகுதி இதனைச்சீர்திருத்தி அமைக்க வேண்டியதன் அவசியம் பற்றி வடமாநில மேலதிக அரசாங்க அதிபரிடம் சங்க நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

## மகஜர்

அல்லைப்பிட்டி, வியாழன்

யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்குச் செல்லும் 779ம் இலக்கமுடைய இ.போ.ச பஸ் வண்டியை யாழ்ப்பாணத்திலிருந்து இரவு 9-30 மணிக்கு ஊர்காவற்றுறைக்குச் செல்வதற்கு வசதிசெய்து தரும்படி தீவுப்பகுதி பஸ்பிரயாணிகள் சங்கத்தினர் வடபகுதி இ. போ. ச. முகாமையாளரைக்கேட்டுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேற்காஸிய நெருக்கடி பற்றிய
# அமெரிக்க யோசனைகள் ஏற்க முடியாதவையாம்
## எகிப்திய மீண்டும் எதிர்ப்பு

லண்டன் பெப். 12

இஸ்ரேலுக்கு மேலும் ஆயுதங்களை தொடர்ந்து வழங்கினுல் பிரிட்டன் அதன் விளைவுகளை எதிர் நோக்க வேண்டியிருக்கும் என்று ஆறு அரபுநாடுகள் எச்சரித்துள்ளன.

லண்டனிலுள்ள இந்த அரபுநாடுகளின் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு இந்த எச்சரிக்கையைத் தெரிவித்துள்ளனர்.

சவூதி அராபியா, சிரியா ஈராக், ஐக்கிய அரபுக்குடியரசு, ஜோர்டான் லிபியா ஆகிய நாடுகள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

இஸ்ரேலுக்கு தொடர்ந்து ராணுவ உதவிகளைப் பிரிட்டன் வழங்கினுல் பிரிட்டன் இந்த அரபு நாடுகளின் உறவுகளை இழக்க நேரிடும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

### எகிப்துநிராகரிப்பு

மேற்காசிய நெருக்கடிக்கு அமைதித்தீர்வு ஏற்பத்டுதுவது சம்பந்தமாக அமெரிக்கா தெரிவித்திருந்தயோசனைகளை ஐக்கிய அரபுக் குடியரசு மீண்டும் நிராகரித்திருக்கின்றது

இந்த யோசனைகளை அரபுக் குடியரசு ஏற்றுக் கொள்ளக் கூடும்என்று முன்னர் செய்திகள் வந்தன.

அமெரிக்காவின் யோசனைகள் ஏற்றுக்கொள்ளக் கூடியவையல்ல. 1967ம் ஆண்டு பாதுகாப்புசபை நிறைவேற்றிய தீர்மானத்தை ஐக்கிய அரபுக்குடியரசு எப்பொழுனமே ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் இருந்துவந்துள்ளது ஆனல் யுத்தநிறுத்த தீர்மானத்தையும் இதரதீர்மானங்களையும்பிரித்துவைப்பது முடியாத காரியம்யுத்த நிறுத்தஎல்லைபற்றி இஸ்ரேல் பேசுகின்றது. ஆனல் அதேசமயம் அந்த தீர்மானத்தை அதுகௌரவிக்கவும் தவறுகின்றது. யுத்த நிறுத்த எல்லையை ஏற்றுக் கொண்டால் அதுவேநிரந்த எல்லைகளாகவும் ஏற்றுக் கொளளப்பட வேண்டிய நிலை ஏற்படும் இவ்வாறு ஐக்கிய அரபுக் குடியரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### ஜோர்டானில் கலவரம்

ஜோர்டன் அதிகாரிகள் உள்நாட்டுப் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளில் இறங்கியதைத் தொடர்ந்து அரபுக் கொமாண்டோக்களுக்கும்ஜோர்டானியர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன, ஆனல் ஜோர்டான் அதிகாரிகள் இதை மறுத்துள்ளனர்.

அடிஸ் அபபாவில் அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு வில்லியமரோஜஸூம் யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷ டிட்டோவும் நேற்றுமேற்காஸிய நிலைமைபற்றி ஆலோசனைகள் நடத்தினர்கள். மேற்காஸியாவுக்கு ஆயுத வினியோகம் கட்டுப்படுத்தப்படவேண்டும்ஏன்று இருவரும் ஒப்புக் சொண்டதாக தெரிகின்றது.

நேற்று சாக்கடல் பகுதியில் இஸ்ரேலியரும் அரபுக் குடியரசுப்ப டை யி ன ரு ம் மோதிக் கொண்டதில் இரு கோரில்லாக்கள் கொல்லப்பட்டதாகவும் ஒரு மோட்டார்படகுகைப்பற்றப்பட்டதாகவும் இஸ்ரேலியர் கூறினர்கள்.

### மூனிச் சம்பவம்

மூனிச்சில்இஸ்லிரேயவிமானப்பிரயாணிகள்மீதுகுண்டு வீசித்தாக்கியதற்காக கைது செய்யப்பட்ட 3 அரபுக்களும் மேற்கிப் பேர்லின் நீதிமன்றமொன்றில் ஆஜர் செய்யப்பட்டனர், கொலைக் குற்றம் புரிந்ததாகஇவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று தெரிகின்றது.

## சிரமதானமூலம் வீதிகள் திருத்தினர்

பச்சிலைப்பள்ளி, வியாழன்

செம்பியன்பற்றுக் கிராம சபையினரால் நடாத்தப்படும் உள்ளூராட்சி வார தொழில் மகத்துவ தினத்தை முன்னிட்டு கிராம சபைத்தலைவர் திரு. சி. முத்தையா வட்டார உறுப்பினர் பி. ஞானப்பிரகாசம் ஆகியோர் தலைமையில் செம்பியன்பற்றுப் பொதுமக்களும் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் செம்பியன்பற்று அர்ச் பிலிப்பு தேரியார் ஆலயமுன்றலில் உள்ள வீதியை சிரமதான மூலம் திருத்தினர். செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, உடுத்துறை மகாவித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் அவ்வப்பகுதி வட்டார உறுப்பினர் தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானங்களைச் சிரமதான மூலம் திருத்தினா. தாளையடி சனசமூகநிலையம், கிராம முன்னேற்றச்சங்கம், சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம், அங்கத்தவர்களும், றோ. க. பாடசாலை மாணவர்களும், வட்டார உறுப்பினர், பச்சிலைப்பள்ளி விளையாட்டு உத்தியோகத்தர் தலைமையில் சென். அன்ரனீஸ் விளையாட்டு மைதானத்தைத் திருத்தினர்.

முள்ளிப்பற்றுக் கிராம சபையிர் உள்ளூராட்சி வார தொழில் மகத்துவதினத்தை முன்னிட்டு இயக்கச்சி-முள்ளியான் வீதியிலிருந்து புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலயத்துக்குச்செல்லும் தெருவை [illegible] பற்றுக் கிராம[illegible]வர் திரு. தா. கார்த்திகேசு தலைமையில் சிரமதான

## லண்டன் பூங்காவில் புதிய பள்ளிவாசல்

லண்டன், பெப். 12

லண்டன் மாநகரிலுள்ள ரீஜன்ட் பூங்காவில் அழகிய பள்ளிவாசல் ஒன்று நிர்மாணிக்கப்படவிருக்கிறது. இஸ்லாமியக் கட்டிடக்கலை நுட்பங்களுடன் கலையழகு மிளிரும் நவீன கட்டிடமாக எழுப்பப்படும் இந்தப் பள்ளிவாசல், லண்டனில் வதியும் முஸ்லிம்களின் தொழுகையை நடத்தும் புதிய ஸ்தலமாகவும் விளங்கும்.

லண்டன் இஸ்லாமிய நிலையத்தார் இப்புதிய பள்ளிவாசலை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறார்கள். அண்மையில் மேற்படி நிலையத்தார் புதிய பள்ளிவாசலுக்கான வரைபடம் கோரி, கட்டிடக் கலைஞர் மத்தியில் ஒரு போட்டி நடத்தினர். பிரிட்டனுடன் இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்த பல கட்டிடக் கலைஞர்கள் இப்போட்டியில் பங்குகொண்டனர். இப்போட்டியில் பிரபல பிரிட்டிஷ் கட்டிடக் கலைஞரான சேர் பிரிட்ரிக் ஜிபேர்ட்டின் வரைபடமே மிகச் சிறந்தாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, போட்டிப் பரிசான 3000 பவுண்கள் அவருக்கு வழங்கப்பட்டது.


சேர் ஜிபேர்ட், இஸ்லாமியக் கட்டிடக் கலையில் பாண்டித்தியம் பெற்றவர். ரீஜன்ட் பூங்கா பள்ளிவாசலுக்கான தமது மாதிரி வரை படத்தில், பள்ளிவாசல் முன்றலில் ஒரு செயற்கை நீர்நிலையை இவர் சிருஷ்டித்திருக்கிறர். இப்பள்ளிவாசல் கான்கிரீட் அமைப்புகளைக் கொண்டு நிர்மாணிக்கப்படும். பள்ளிவாசல் தூபி எஃகுப் பாளங்களால் அமைக்கப்பட்டு, அதன்மீது அலுமீனியத் தகடுகள் இடப்படும். இப்பள்ளிவாசல், பூரணமாகக் கட்டி முடிக்கப்பட்டதும், அதன் பொன்னிறத் தூபியும், கவிகை மாடமும் இப்பூங்காவின் எழில் தோற்றப் பின்னணியில் அழகுமயமாய் காட்சிதரும்.

## மாபெரும் சோவியத் கலைக் களஞ்சியம்.

மாஸ்கோ, பெப் 11

மாபெரும்சோவியத் கலைக் களஞ்சியத்தினது மூன்ருவது பதிப்பின் முதல் பகுதி தற்சமயம் வெளிவந்துள்ளது. இதன் வெளியீடு சோவியத் கலாச்சார வாழ்வில் முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது. இக்கலைக் களஞ்சியத்தினது முதலாவது பதிப்பின் 65 பகுதிகள் 1926-1931 காலப் பகுதியில் வெளிவந்தன. இரண்டாவது பதிப்பின் 51 பகுதிகள் 20 ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்தன. புதிய பதிப்பு 30 பகுதிகளைமட்டுமேகொண்டதாயிருப்பிணும் அவற்றில் 100,000க்கும் அதிகமான வியாசங்கள் அடங்கியுள்ளன.

மாபெரும் சோவியத் கலைக் களஞ்சியத்தின் சகல பதிப்புகளையும் பேரவை உறுப்பினர்களான சேர்ஜி வவிலோவ், ஒட்டோ ஷிமித்ற், போரிஸ் விவெடென்ஸ்கி உட்பட பிரபல சோவியத் விஞ்ஞானிகளைக் கொண்ட ஆசிரியர்குழு தயாரிக்கிறது. சோவியத் யூனியனின் மிகப் பிரபல்யம் வாய்ந்த பௌதிகவியலாளரும், நோபல் பரிசுபெற்றவருமான அலெக்ஸாண்டர் ரிரேகோரேவ் மூன்ருவது பதிப்பின் ஆசிரியராகஉள்ளார். முதலாவது பகுதிக்கு மாத்திரம் 3,086 கட்டுரைகளை எழுதுவதிலும், தயாரிப்பதிலும் பல்வேறு துறைகளையுஞ் சார்ந்த 1,100 விஞ்ஞானிகள், ராஜ்யவாதிகள் பிரபல நிபுணர்கள் பங்கெடுத்துள்ளனர். அடுத்த நாலாண்டுகளில் கலைக்களஞ்சியப் பிரசுர வேலைகள் யாவும் பூர்த்திசெய்யப்படவுள்ளன.



வட்டுக்கோட்டைக் கிராமசபை விளையாட்டு மைதானத்தில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவை வரவேற்கும் வைபவத்தில் கிராமசபை உறுப்பினர் திரு. நா. இரத்தினசிங்கம் நன்றிதெரிவித்துப் பேசினர்.

## ஐரோப்பிய பொதுச்சந்தை: பிரிட்டனின் வெள்ளை அறிக்கை

லண்டன், பெப் 12

ஐரோப்பிய பொதுச் சந்தை சம்பந்தமாசு பிரிட்டிஷ் அரசாங்கம் தனது நிலையை தெளிவாக விளக்கி வெள்ளை அறிக்கை ஒன்றை நேற்று முன்தினம் வெளியிட்டது. ஐரோப்பிய வர்த்தக சமூகத்துடன் பிரிட்டன் சேர்ந்து கொள்வதால் எழும் சாதக, பாதக பொருளாதார நிலையினை விபரமாக மதிப்பிட்டு இவ்வறிக்கை வெளியாகியிருக்கிறது.

ஐரோப்பிய பொதுச் சந்தை விவகாரத்தில் அரசாங்கத்தின் சார்பாக பொதுமக்களின் ஆதரவை திரட்டும் நோக்கமாக இவ்வறிக்கை வெளியிடப்படவில்லை. இவ்விஷயத்தில் பொதுமக்கள் தாங்களே தீர்மானித்து ஒரு முடிவெடுக்கும்வண்ணம் அடிப்படையான சகல தகவல்களும் இதில் அடங்கியிருக்கின்றன.

'பிரிட்டனும் ஐரோப்பிய சமூகமும்' என்ற தலைப்பில் வெளியாகியிருக்கும் இந்த அறிக்கை பிரிட்டன்பொதுச் சந்தையில் அங்கத்துவம் பெறுவதால் ஏற்படக்கூடிய விளைவுகள்பற்றி பொதுமக்கள் விவாதிப்பதற்கு ஒரு பயனுள்ள அறிக்கையாக கருதப்படுகிறது. பிரிட்டன் அங்கத்துவம் பெறுவது சம்பந்தமாக நடைபெறும் பேச்சுவார்த்தைகள் அங்கத்

### நூலகவியல் வகுப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த மூன்று வருடங்களாக யாழ்ப்பாணத்தில் நடைபெருமலிருந்த நூலகவியல் பரீட்சைக்கான வகுப்புகள் இம்மாதம் 14ந் திகதி முதல் ஆரம்பமாகவிருக்கின்றன. ஆரம்ப நாள் வரையில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுமென இலங்கை நூலகச் சங்கத்தின் வட பிரதேசச் செயலாளர் அறிவித்திருக்கிருர்.

... ...

### அனுதாபம்

சுழிபுரம், வியாழன்

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத் தலைவராக சிறப்புடன் பணியாற்றிய சமூகஜோதி சி. தியாகராசாவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து துக்கம் அனுஷ்டித்தனர் வழக்கம்பரை சனசமூக நிலையத்தினர். அனுதாபத் தந்திகளும் அனுப்பிவைக்கப்பட்டன. சிறந்த சமூகசேவையாளரும் நல்ல அறிவுரையாளராக பணிபுரிந்தவன்மான சமூகஜோதியிரு மறைவுஎமக்கு பெரும் நஷ்டமாகும் என அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பேர்லின் பிரச்னை
## சோவியத் குறிப்பு: அமெரிக்கா அதிருப்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா அதிருப்தி

வாஷிங்டன், பெப். 12

பேர்லின் சம்பந்தமாக பேச்சுநடத்துவதற்கு சோவியத் தலைவர்கள் இணங்கிய போதிலும் இதுவிஷயமாக அவர்கள் அனுப்பியிருக்கும் குறிப்பு குறித்து அமெரிக்க அதிகாரிகள் அதிருப்தியடைந்திருப்பதாகத் தெரிகின்றது.

பேர்லின் நகரின் எதிர்காலம் பற்றி ஆலோசிப்பது பற்றி பதிலளித்துள்ள சோவியத் அதிகாரிகள் இருதரப்பு மக்களுக்கிடையிலும் உறவாடிக்கொள்வது பற்றிய அம்சத்தை அவர்கள் உதாசீனம் செய்திருப்பதாக அமெரிக்கர் கருதுகின்றனர்.

பெர்லின் நகரின் எதிர்காலம்பற்றி மிகவிரைவில் அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் ஆலோசனை கலப்பதற்கு ரஷ்யா இணங்கியிருக்கின்றது.

நேற்று முன்தினம் மாஸ்கோவிலுள்ள அமெரிக்க தூதரிடம் சோவியத் யூனியன் கையளித்த ஒரு கடிதத்தில் இந்தப்பேச்சு வார்த்தைகளுக்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

பேர்லின் சம்பந்தமான நெருக்கடிகளைத் தீர்த்துக் கொள்வதற்கு கடந்த டிசம்பரில் அமெரிக்கா தெரிவித்த ஒருயோசனைக்கு இப்பொழுது சோவியத் யூனியன் பதிலளித்திருக்கின்றது.

# பிரதமர் இந்திரா சோஷலிஸ்ட் அல்லவாம் காமராஜர் கூறுகிறார்

சென்னை, பெப். 12

பிரதமர் இந்திராகாந்தி சோஷலிஸ்ட் கொள்கைகளில் நம்பிக்கை கொண்டவர் அல்ல. அவர் சுயநலம் கொண்டவர் என்று திரு. காமராஜர் கூறியிருக்கிறார்.

சேலத்தில் தமிழ் நாடுகள் காங்கிரஸ் கட்சிப் பேரவையில் அவர் பேசுகையில் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

தமிழ் நாடு மக்கள் ஹிந்தியை வெறுக்கவில்லை என்றும், ஆனால் ஹிந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற வரையில் ஆங்கிலம் ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்றும் காமராஜ் த. நா. கா. க. பேரவையில் கூறினார்.

நேருஜி இந்த உறுதிமொழியை அளித்திருந்தார் இது அமுலாக வேண்டு என்று தமிழ் நாட்டு மக்கள் விரும்புகிறார்கள் நேருஜியின் உறுதிமொழியை அமுலுசெய்வதின் விளைவாக ஹிந்தி இல்லாமல் ஆங்கிலம் மட்டும் நீடிக்குமானால் தாம் அதை எதிர்க்கப் போவதில்லை என்று காமராஜர் கூறினார்.

இந்த விஷயத்தில் ஹிந்தி பேசாத மக்களின் பிரச்னைகளையும் கஷ்டங்களையும் வட இந்தியாவில் உள்ள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.

ஹிந்தி இருக்கவே கூடாது என்றும் ஆங்கிலம் மட்டுமே நீடிக்க வேண்டும் என்றும் தாம் கூறுகின்ற கொள்கை திராவிட முன்னேற்றக் கழகம் தனது மொழிக் கொள்கை என்று சொல்லிக்கொள்வதை போன்றது அல்ல அவர் சொன்னார்.

தி. மு. க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக ஹிந்தியை எதிர்த்தது. தி. மு. க. தற்போது அதிகாரத்தில் இருக்கிறது. தனதுகோரிக்கையை ஏற்றுக் கொண்டால் ஆதரவு தருவதாக பிரதமருக்கு நிபந்தனை விதிக்கக் கூடிய நிலையில் தி. மு. க. இருக்கின்றது. என்றாலும் அது மவுனமாக இருக்கின்றது. தி. மு. க.வுக்கு கொள்கையோ அல்லது திட்டமோ எதுவும் கிடையாது என்பதைக் குறிப்பிடவே இந்த முரண்பாட்டைச் சுட்டிக் காட்டுவதாக காமராஜர் கூறினார்.

மொழிப்பிரச்னை இன்னமும் தீராமல் இருக்கிறது என்பதே தமது கருத்து என்று காமராஜர் கூறினார். நேருஜியின் உறுதிமொழியை மனப்பூர்வமாக அமுல்செய்தால்தான் அது தீரும் என்றார் அவர்.

இந்திராகாந்தியின் கோஷ்டியை போட்டி காங்கிரஸ் என்று அவர் வர்ணித்தார். இந்திரா காந்தி பதவியில் நீடிக்கும்வரையில்தான் அது இருக்கும் இதைப் பிரதமர் உணர்ந்திருக்கிறார். எனவே தான் அவர் அடிக்கடி ஒவ்வொருராஜ்யமாக சுற்றுப் பிரயாணம் செய்கிறார். தம்மைஆதரிப்பவர்கள் மட்டுமே முதலமைச்சர் பதவியில் இருக்க வேண்டும் என்பதற்காக அவர் சுற்றுப்பிரயாணம் செயகிறார். இவ்வாறு செம்வதன் மூலம் ராஜ்யங்களைத் தமது பிடியில் வைத்திருக்கமுடியும்என்றும் தாம் அதிகாரத்தில் நீடிக்க முடியும் என்றும் பிரதமர் கருதுகிறார் என்று காமராஜ் கூறினார்.

பிரதமர் சோஷலிஸ்ட் அல்ல சோஷலிஸ்ட் கொள்கைகளில் நம்பிக்கை கொண்டவரும் அல்ல. அவர் சுயநலம் கொண்டவர் என்று காமராஜ் கூறினார்.

அதிகாரத்தில் நீடிப்பதற்காக கம்யூனிஸ்டுகளின் ஆதரவு பிரதமருக்குத் தேவைப்படுகிறது. ஆனால் தம்மை கம்யூனிஸ்ட் அல்ல என்று அவர் அடிக்கடி கூறுகிறார். ஏனென்றால், அப்படியிருந்தால் மக்கள் தம்மைச் சகித்துக்கொள்ள மாட்டார்கள் என்பது பிரதமருக்குத் தெரியும் என்று காமராஜ் கூறினார்.

ராஜ்யங்களிடையே பாரபட்சம் காட்டுவதன் மூலம் நாட்டின் சமஷ்டி அமைப்பையே பிரதமர் ஆபத்துக்கு உள்ளாக்குகிறார் என்று காமராஜ் எச்சரித்தார்.

...பற்றுக் கிராமசபைத் தலைவர் திரு. தா. கார்த்திகேசு தலைமையில் சிரமதான மூலம் அமைத்தனர். சாதி, சமய வேறுபாடின்றி பன்னூற்றுக்கணக்கான மக்கள் மேற்படி சிரமதானத்தில் கலந்துகொண்டனர்.

## 'இவர்களுக்கு சுவர்க்கம் திறக்கப்படும்'

குமரபுரம், வியா.

"மாணவர்கள் இளமைப் பருவத்திலேயே நல்ல பண்புகளைப்பயின்று கொள்ள வேண்டும் முதியவர்களைப் பேணுவதும் சிறு தொழில்களைச் செய்வதும் இன்றியமையாத நல்ல பழக்கங்கள். இத்தகைய நற்பழக்கங்களுடைய இளைஞர்கள்சமுதாயத்திற்கு வெளிச்சத்தைஊட்டுபவராவார். இவர்கள் நாட்டுக்குச்சிறந்த ஆபரணம் போல் பிரகாசிப்பார்கள்" இவ்வாறு சமூகசேவையில் ஈடுபட்டுள்ள செல்வி எலிசபெத் பேக்கர் என்னும் ஆங்கில அம்மையார் விசேஷ விருந்தினராகக் குரம்புரம் வைப்பாடசாலையில் மாணவர்களுக்கான உரையைதமிழில் பேசுகையில் கூறினார். ஆசிரியை திருமதி என். ரி. செல்லத்துரை வரவேற்புரை நிகழ்த்தினார்.

தலைமைவகித்த அதிபர் திரு ஆர். ரி. சுப்பிரமணியம் "இம்மையில் சமுதாய சேவை புரிபவர்களுக்கு சுவர்க்கவாயில் தானாக திறபடும்" என்றார்.

## வைத்திய நூல் வெளியீட்டு விழா

கொழும்பு, வியாழன்

பேராசிரியர் வைத்திய கலாநிதி அ. சின்னத்தம்பி எழுதியுள்ள 'மகப் பேற்று மருத்துவம்' என்னும் சிறந்த வைத்திய நூல் வெளியீட்டு விழா, இம்மாதம் 15ம் திகதி மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் நிகழும் இவ் விழாவுக்கு சங்கத்தலைவர் திரு. கு. பாலசிங்கம் தலைமைவகிப்பார்.

பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம், வைத்திய கலாநிதி த. குமாரசாமி, திரு. கி. லக்ஷ்மணன், ஜனாப் ஏ. எம். ஏ. அஸீஸ், கலாநிதி சு. வித்தியானந்தன், திரு அ. வி. மயில்வாகனம் ஆகியோர் இப் பாராட்டு விழாவில் சிறப்புரை நிகழ்த்துவர்.

## சினிமா நடிகையை மணப்பதாக சொன்னாராம்

லாஸ்வேகாஸ், பெப் 12

பிரபல இருதய மாற்று நிபுணரான பேராசிரியர் கிறிஸ்டியன் பேர்னார்ட்டின் முன்னாள் துணைவியார் எழுதி வெளியிடவிருக்கும் புத்தகம் ஒன்றில் தன்னைப் பற்றிய தகவல் எதுவும் இருந்தால் சட்டநடவடிக்கை எடுக்கப்போவதாக பிரபல சினிமா நடிகை ஜினாலொபிரிஜிடா கூறியிருக்கிறார்.

டாக்டர் பெர்னார்ட் தம்மைத் திருமணம் முடித்துக் கொள்ளும்படி ஒ சமயம் கேட்டதாக சினிமா நடிகை கூறினார். இந்த இத்தாலிய நடிகையால் எழுதப்பட்ட காதல் கடிதங்களையும் உள்ளடக்கிய புத்தகம் ஒன்றை வெளியிடப்போவதாக டாக்டரின் முன்னாள் மனைவி சமீபத்தில் கூறியிருந்தார்,

விவாகரத்துப் பெற்றபின்னர் சமீபத்தில் டாக்டர் பேர்னார்ட் தம்மைத் திருமணம் செய்துகொள்ளும்படி என்னைக் கேட்டார். தாமும்விவாகரத்துப்பெறப் போவதாகவும் அவர் கூறினார் என்றார் இத்தாலிய நடிகை.

தாம் எழுதிய காதல் கடிதங்களையும் வைத்து டாக்டரின் முன்னாள் மனைவி புத்தகம் வெளியிடப்போவது பற்றி தாம் அறிந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனது அந்தரங்க வாழ்க்கை பற்றி அவா புத்தகம் எழுதப்போகிறார் என்று தெரிகின்றது, அதாவது அவர் என்னையும் சில கடிதங்களையும் டாகடர் பேர்னார்ட்டையும் சம்பந்தப்படுத்தி எழுதப்போகிறார் இதனால்தான் நான் இது பற்றி பேசவேண்டியிருக்கிறது. மற்றப்படி அந்தரங்க விஷயங்கள்பற்றி நான்பேச விரும்புவதில்லை என்றார் டாக்டர் பிரிஜிடா

ஏதாவது கடிதம் இருந்து அவை சட்டவிரோதமாக பிரசுரிக்கப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள். என்றார் அவர்.

செல்வி பிரிஜிடா விரைவில் அமெரிக்க வர்த்தகர் ஜோர்ஜ் காஃப்மன் என்பவரைத் திருமணம் செய்யவிருக்கிறார். 1968-ம்ஆண்டு அவர் தமது முன்னாள் கணவனிடமிருந்துவிவாகரத்துப் பெற்றார்.

## இன்று இலக்கிய கருத்தரங்கம்

கோப்பாய், வெள்ளி

உள்ளூராட்சி வாரத்தையொட்டிய இலக்கியக் கருத்தரங்கொன்று இன்று மாலை கோப்பாயில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் கோப்பாய் கிராமசபைத் தலைவர் திரு தி பரமானந்தராசா உட்படப் பலர் கலந்து கொள்வர்.

## பாடசாலை திருத்தப்படும்

குமரபுரம், வியாழன்

சுமார்பதினைந்து வருடங்களுக்கு முன்பு கரைச்சி சைவவித்தியா விருத்திச் சபையினரால் அமைக்கப்பட்ட பிரதான கட்டடம் இன்னும் பூசப்படாமலும் வெள்ளையடிக்கப்படாமலும் இருப்பதை குமரபுரம் சைவப்பாடசாலையைத் திடீர் விஜயம் செய்து தரிசித்த வடபகுதி வித்தியாபதி திரு. எஸ். தணிகாசலம் பார்த்தபின்புவேண்டிய திருத்தம்செய்வதற்கு நடவடிக்கைஎடுப்பதாக பாடசாலை தலைமையாசிரியருக்கு உறுதி கூறினார்.

மேலும் பாடசாலையின் வளர்ச்சிக்கேற்ப வேண்டிய வசதிகள் செய்யவும் கல்வி அதிபதி முன்வந்திருப்பதாகத் தெரிகிறது.

.........

## மல்லாகம் கி. சபை தலைவருக்கு வரவேற்பு

சுன்னாகம், வியாழன்

மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. வ. பொன்னம்பலத்துக்கு அளவெட்டி தேன்தமிழ் விளையாட்டுக் கழகத்தினர் பொதுவரவேற்பளிக்கவிருக்கின்றனர். இன்று அளவெட்டி தெற்கு நெசவுநிலையத்துக்கருகாமையிலுள்ள மைதானத்தில் செல்வன் க. ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இவ்வரவேற்பில் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் சுன்னாகம் பட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம், பண்டத்தரிப்புக் கிராமசபைத் தலைவர் திரு. எஸ். எஸ். கனகசபாபதி ஆகியோர் உட்படப் பலர்வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவர்.

...பந்தமாக நடைபெறும் பேச்சுவார்த்தைகள் அங்கத்துவம் பெறுவதற்கான நிபந்தனைகள் போன்றனவும் இதில் விளக்கப்பட்டிருக்கின்றன.

'எவ்வழியைக் கையாண்டும்' அங்கத்துவம் பெற்றுவிட வேண்டும் என்ற நிலையில் பிரிட்டன் இல்லையென்பதை இவ்வறிக்கை தெளிவுபடுத்துகிறது. அதேவேளை ஐரோப்பிய கண்டத்தின் பாதுகாப்புக்கும் அரசியல் ஸ்திரநிலைக்கும் பொருளாதார கட்டுக்கோப்பிற்கும் பிரிட்டன் ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரவேசிப்பதன் முக்கியத்துவத்தையும் இவ்வறிக்கை வலியுறுத்துகிறது.

.........

## புதிய பாதை

சுழிபுரம், வியாழன்

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வீடமைப்பு-சேரி ஒழிப்புதினமான நேற்றையதினம் சுழிபுரம் ஐயனார் கோவிலடியிலிருந்து திருவடிநிலையைநோக்கி ஓர் புதிய பாதை திறக்கப்பட்டது. இதுவரை பொதுமக்களுக்கு இருந்துவந்த கஷ்டம் இப்பாதை திறந்ததினால் நீக்கப்பட்டுள்ளது. இப்பாதை திறப்பதில் சுழிபுரம் கிராமசபைத் தலைவர். கிராமசபை அங்கத்தவர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு பணியாற்றினர்.

.........

## உண்ணாவிரதத்தை கைவிட்டார்

அனுராதபுரம், வியா.

ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கக் காரியதரிசி திரு. ஆ. செல்லையா, சங்கத்தின் கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்து இம்மாதம் 8-ம் திகதி காலை ஆரம்பித்த உண்ணாவிரதத்தை பதினெட்டு மணித்தியாலங்களின் பின் கைவிட்டார்.

இவரது கோரிக்கைகள் பற்றிய பேச்சுவார்த்தை நடத்த இம்மாதம் 15-ம் திகதி வரும்படி கடிதம் ஒன்றுகிடைத்ததால் உண்ணாவிரதத்தைக் கைவிட்டதாகவும் அறிவித்துள்ளார்.

.........

சிங்களத்தேர்வில்லை

## வேலை நீக்கம்

கைதடி, வியாழன்

தென்மராட்சிக் காரியாதிகாரிப் பிரிவில் கடமை புரியும் சாவகச்சேரிக் கிராம சேவையாளர் திரு. பி. மார்க்கண்டு சிங்களத் தேர்ச்சி பெறாததன் காரணமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

## நோயாளர் அவதி

சுழிபுரம், வியாழன்

தொல்புரம் அரசினர் வைத்தியசாலையில் மலசலகூடம் இல்லாமையால் இங்கு கடமையாற்றும் ஊழியர்களும் மருந்து பெறவரும் நோயாளர்களும் மிகுந்த சிரமப்படுகின்றனர். இதையிட்டு சுகாதாரப் பகுதியினர் இதுவரை எவ்வித அக்கறையும் மேற்கொள்ளாதது பற்றி இப்பகுதி மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

## புகையிலைச்செடி நாசம்

ஊர்காவற்றுறை, வியா

சரவணைக் கிராமத்தைச் சேர்ந்த புகையிலைத்தோட்டமொன்றில் தவறான கிருமி கொல்லி மருந்தினைப்பாவித்தமை காரணமாக சுமார் 3000-க்கு அதிகமான புகையிலைச்செடிகள் சேதமடைந்துள்ளனவாம் இதனால் ரூபா ஆறாயிரத்திற்கு மேலதிகமாக நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

## விண்வெளியில் ஜப்பான் செய்மதி

டொக்கியோ, பெப். 11

ஜப்பான் செயற்கைக் கிரகமொன்றை இன்று விண்வெளிக்கு அனுப்பியுள்ளது.

முன்னர் 4 தடவைகள் செயற்றைக் கிரகத்தை விண்வெக்கு அனுப்பும் முயற்சியில் தோல்வியடைந்தது. ஆயினும் இம்முறை அம்முயற்சியில் வெற்றி கண்டது. இக்கிரகத்தில் பூமிக்குத் தகவல் அனுப்பும் கருவிகள் இணைக்கப்பட்டுள்ளன.

## த.கா.வா.முன்னணி நிர்வாகிகள்

கைதடி, வெள்ளி

கைதடி மேற்கு தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணிக் கிளை நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: சி நாகன், காரியதரிசி: வா மார்க்கன்டு, உபகாரியதரிசி: க கோபால், பொருளாளர்: ப மாதன்: 50 பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

கைதடி மேற்கு கலைவாணி வித்தியாசாலைக் கருகாமையில், திரு எஸ் சானையன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பிரதம பேச்சாளராக திரு குமாரசாமி கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஆன்மாவுக்கு மரணத்துக்குப் பின் மறுபிறப்பு உண்டு. முன்ஜென்மத்தில் அடைந்த வினைகள் மறுபிறப்பில் தொடர்ந்துவரும். இந்த இந்துமதக் கொள்கையை நான் முற்றிலும் ஒப்புக்கொள்கிறேன்.

— மகாத்மாகாந்தி.

ஈழநாடு
Eelanadu N. tional Tamil Daily
Telegram: "ELLANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 2-ந் திகதி (13-2-70)

## இராணுவத் தாக்குதல்

வல்வெட்டித்துறை இராணுவமுகாமைச் சேர்ந்த சிப்பாய்கள் சிலர் அங்குள்ள பொதுமக்கள்மீது தாக்குதல் நடத்தியதாகவும் அங்கு அமைதியை நிலைநாட்டச் சென்ற பருத்தித்துறை ஆட்சிமன்றப் பிரதிநிதியும் சிப்பாய்களினால் எக்கச்சக்கமான இடத்தில் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் வெளிவந்த செய்தி இந்த நாட்டுமக்களைத் துணுக்குறச் செய்யும் இங்கு இராணுவம் தேவைதானா; அது அவசியம்தானென்றால் அதன் கடமைகள் என்ன? இவற்றை அரசாங்கம் தீர்மானித்து உடனடியாக சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம்.

கள்ளக்கடத்தலையும் சட்டவிரோதக் குடியேற்றத்தையும் தடுப்பதற்காகவே வடக்கின் கரையோரப் பகுதிகளில் இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர். இப்படித்தான் முன்னைய அரசாங்கம் தெரிவித்தது. இன்றைய தேசிய அரசாங்கம் ஆட்சிபீடத்தில் அமர்ந்ததும் வடபகுதியில் இராணுவ முகாம்கள் தேவையில்லையென்றும் அவற்றை அகற்றவேண்டுமென்றும் வடபகுதியிலுள்ள பொதுஸ்தாபனங்களும் ஆட்சிமன்றப் பிரதிநிதிகளும் அரசாங்கத்தைக் கோரினர். அந்தச் சமயத்தின் முன்னைய ஆளும் கட்சியினரான இன்றைய எதிர்க்கட்சித் தலைவர்கள் பலர் பிரதமரைச் சந்தித்து வடக்கிலிருந்து இராணுவமுகாம்களை அகற்றக்கூடாதென வற்புறுத்தினர். வடபகுதி மக்கள் தெரிவுசெய்து அனுப்பிய பிரதிநிதிகளின் கோரிக்கையை நிராகரித்த பிரதமர் எதிர்க்கட்சித் தலைவர்களின் வற்புறுத்தலை ஏற்றுக்

நிலவியிருக்கும்; மேலும் மேலும் இதுபோன்ற அசம்பாவிதங்கள் நிகழ்வதற்கு இடமேற்பட்டிருக்காது.

கள்ளக்கடத்தலைத் தடுப்பது சுங்கப்பகுதியினரின் பொறுப்பு சுங்கப்பகுதி என ஒன்றை வைத்துக்கொண்டு இராணுவத்தை எதற்காக இதில் ஈடுபடுத்த வேண்டும்? சுங்கப்பகுதியில் போதிய ஆட்கள் இல்லையானால் அதை வலுப்படுத்துவதற்குப் புதியவர்களை எடுக்கலாமே! இதன் மூலம் வேலையில்லாப்பிரச்னை கூட ஓரளவு தீரும். அல்லது சுங்கப்பகுதியை ஒழித்துக்கட்டிவிட்டு இராணுவத்திடமே சகல பொறுப்பையும் ஒப்படைத்துவிடலாம்.

கள்ளக்கடத்தலைத் தடுப்பதில் இராணுவத்தினர் எந்த அளவுக்கு வெற்றியீட்டியுள்ளனர்? கள்ளக்கடத்தல் வடபகுதியில் மட்டுந்தானா நடைபெறுகிறது? கொழும்புத் துறைமுகத்திலேயே பல லட்சம் ரூபாய் பெறுமதியான கள்ளக்கடத்தல் முயற்சி கண்டுபிடிக்கப்படவில்லையா? தென்னிலங்கைப் பகுதியில் கள்ளக்கடத்தல் முயற்சி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதே? இங்கெல்லாம் ஏன் இராணுவமுகாம்கள் அமைக்கப்படவில்லை; ஏன் இராணுவத்தினரை நிறுத்தவில்லை? சட்டவிரோதக் குடியேற்றத்தை தடுப்பது இராணுவம் இங்கு நிறுத்தப்பட்டுள்ளதன் மற்றொரு நோக்கமாம். இதுவரை சட்டவிரோதக் குடியேற்றக்காரர் எத்தனைபேரை இராணுவம் தடுத்து நிறுத்தியிருக்கிறது? பொலிசார் கண்டுபிடித்த சட்டவிரோதக் குடியேற்றக்காரரைவிட இராணுவத்தினர் அதிகமாகக் கண்டுபிடித்திருக்கின்றனரா?

கடந்த ஆறுமாத காலத்தில் சட்டவிரோதமாக எவரும் குடியேறவில்லையென்று

# லெனின் நூற்றாண்டு

# சோஷலிஸப் புரட்சியும் ஜனநாயக வளர்ச்சியும்

— டாக்டர் ஈ: பாலெர் —

பூர்சுவா ஜனநாயகம் என்பது எதார்த்தத்தில் பூர்சுவாக்களுக்கான ஜனநாயகமே. ஆனால் அதேசமயத்தில் தொழிலாளர் வர்க்கத்தின்மீது பூர்சுவாக்கள் வகிக்கும் சர்வாதிகாரமாகும் என்று வி. ஐ. லெனின் காட்டினார். வர்க்கப்போராட்டம் கூர்மையடைகின்றபோது பூர்சுவாக்கள் அதிக அளவிற்கு ஜனநாயகத்தின் திரையை இழுத்துவிடுகின்றனர். ஏகாதிபத்திய சகாப்தத்தில் குறிப்பாக இது வெளிப்படையாகின்றது. எல்லா வழிகளிலும் ஜனநாயகத்தில் இருந்து பிற்போக்கிற்கு மாறுதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று வி. ஐ. லெனின் எழுதினார். லெனினது இந்தக் கருத்துக்களின் சரியான தன்மை இன்றைய தினம் ஊர்ஜிதம் செய்யப்பட்டு வருகின்றது.

சோஷலிசப் புரட்சிமட்டுமேதான், முதலாளிகளிடமிருந்தும் முதலாளித்துவ ஏகபோக வாதிகளிடமிருந்தும் உற்பத்திச்சாதனங்களை எடுத்து அவற்றை உழைக்கும் மக்களின் கரங்களில் வழங்குவதன்மூலமே உண்மையான ஜனநாயகத்தை மக்களுக்கான ஜனநாயகத்தை உத்தரவாதம் செய்ய முடியும்.

ஒரு சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு ஜனநாயகம் என்றல்ல, ஆனால் சர்வாதிகாரமாகவே இருக்க முடியும் ஆனால் இங்கேயும் லெனின் ஒரு கேள்வியை எழுப்புகிறார். யார்மீது சர்வாதிகாரம்? யாருக்காக ஜனநாயகம்? பாட்டாளி வர்க்க சர்வாதிகரம் என்பது மிகப் பெரும்பான்மையினர் தூக்கியெறியப்பட்ட மிக அற்பமான சிறுபான்மையினர் மீது செலுத்தப்படும் சர்வாதிகாரமாகும். அதாவது அதிகபட்ச சாத்திய அளவு ஜனநாயகம் தொழிலாளி வர்க்கத்திற்கான ஜனநாயகம் மக்கட்தொகையின் மிகப் பெரும்பான்மையோருக்கான ஜனநாயகம்.

சோஷலிச ஜனநாயகத்

களுக்கு உழைக்கவும் பொழுது போக்கவும் உரிமையையும் உண்மையான உணர்வு பூர்வசுதந்திரம், உழைக்கும் எண்ணற்ற அமைப்புகளில் சுதந்திரமாக நடவடிக்கையில் ஈடுபட எல்லாச் சூழலையும் உருவாக்குதல் இன்னும் இவைபோன்றவற்றிற்கு உண்மையானஉத்தரவாதம் வழங்குவதுமாகும்.

சோஷலிச ஜனநாயகம் என்பது எந்தவொரு ஸ்தாபனத்தின்பாலும் பொருள் கொள்ள முடியாது. இது உழைக்கும் மக்களுக்கான ஜனநாயகமாகும். ஆகையால் தூக்கியெறியப்பட்ட வர்க்கங்கள், சிறுபான்மையோர் தங்களது மேலாதிக்கத்தை மீண்டும் நிலைநாட்ட முயலும்போது, சோஷலிசப்புரட்சியின் ஆதாயங்களைத் துடைந்தெறிய முற்சிகள் மேற்கொள்ளும்போது 1956ம் ஆண்டில் உறங்கேரியிலும் 1969ம் ஆண்டில் செக்கோஸ்லாவாக்கியவிலும் நடைபெற்றதைப் போன்ற நிகழ்ச்சிகளின் போது அதைக்கண்டு வாளாவிருக்க முடியாது. முதலாளித்துவ ஆட்சியை மீண்டும் நிலைநாட்ட எந்த முயற்சிகளையும் ஒடுக்குவதன் மூலம் சோஷலிச ஜனநாயகம் உண்மையான ஜனநாயகமாக மிகக்குறைவான சிறுபான்மையினருக்கு எதிராக ஆனால் உழைக்கும்மக்களின் எல்லா மக்களின் நலனின் பால் செயல்படுகின்றது.

சோஷலிசச் சூழலில் மட்டும் தான் ''ஜனநாயகம்'' கடைசியாக அதனுடைய சரியானபொருளைப் பெறுகிறது. அதனுடைய முழுமையான உள்ளடக்கத்தினால் நிரப்பியதாகிறது.

இந்த சந்தர்ப்பத்தில் ஒரு கேள்வி எழுகிறது, ஒரு அரசு என்பது பொருளாதார ரீதியாக ஆகும் வர்க்கத்தின் கரங்களில் எப்போதும் ஒரு அரசியல் ஸ்தாபனமாக இருக்குமானால், மிக அதிக ஜனநாயக அரசும்கூட, ''அதிகாரமாக'' இருக்குமானால் ...

துறை உறுதிப் பாட்டிலும் வளர்ச்சியின் மூலமாகவும் அமைகிறது என்று லெனின் வலியுறுத்தினார். இது பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் நிலைமைகளில் அதிக அளவு தொழிலாளர், விவசாயிகள் உழைக்கும் மக்கள் தாங்களாகவே அரசாங்க நடவடிக்களில் நேரடியான பங்கினை எடுத்து கொள்வதில் சோஷலிச அரசு படிப்படியாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திலிருந்து மக்கள் அனைவரின் அரசாக மாறிவிடும்என்ற உண்மை ல்யிமுதலில் வெளியிடப்படுகிறது. பார்ட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வழியாக மக்கள் அனைவரின் அரசுக்கும், மக்களை அனைவரின் அரசின் வழியாக கம்யூனிஸ்டு பொது சுயாட்சிக்கும் செல்வதாகும். இவ்வாறு தான் சோஷலிஸப் புரட்சியின் வெற்றிக்கு பிறகு ஜனநாயக வளர்ச்சியின் பொது வழியாக அமைகிறது.

இவ்வாண்டு

## இலங்கை அரசாங்கம் வெளியிடும் புதிய முத்திரைகள்

கொழும்பு, வியாழன் வெளிநாட்டுச்செலாவணியை நிறையச் சம்பாதித்து வரும் அரசாங்க முத்திரைப் பணியகம் இவ்வாரம் அநேக புதிய முத்திரைகளை வெளியிடவிருக்கின்றது. இவ்வருடம் மே மாதம் பதினொராந் திகதி தொடக்கம் நான்கு புதிய முத்திரைகள் வெளியாகும். அவைகள் ஐந்து சதம், பதினைந்துசதம், ஐம்பது சதம், ஒரு ரூபாய் பெறுமதியான முத்திரைகளாகும்.

இம்முத்திரைகளின் மேலுருவம் நாட்டின் வனவிலங்கு வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஆசிய உற்பத்தி ஆண்டு வைபவத்தைக் கொண்டாடுமுகமாக இவ்வருடம் ஜூன் மாதம் 17-ந்திகதி 60 சத முத்திரை வெளியிடப்படும். வைத்திய நூற்றாண்டு விழா வைபவத்தை முன்னிட்டு ஐந்து சதம், 40 சதம் பெறுமதியானமுத்திரைகள் வெளியிடப்படும். சர்வதேசதபால் யூனியன் தலைமைக்கட்டிடத் திறப்பு விழா இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 17-ந்திகதி நடைபெறும்

ஐ. நா. சபையின் 25 வது ஆண்டு விழாவைக் கொண்டாடுமுகமாக ஒரு இரண்டு ரூபாய் முத்திரைவெளியிடப்படும். கெப்பிட்டி பொலதிசாவை ஞாபகார்த்தமாக நவம்பர் மாதம் 26-ந் திகதி ஒரு 25 சத முத்திரை வெளியிடப்படும்.

### கல்கத்தா சென்றார்

யாழ்ப்பாணம், வெள்ளி இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த இரசாயனதொழில்நுட்ப வல்லுனராகக் கடமையாற்றிய நாவற்குழியைச் சேர்ந்த செல்வன் ச. சிவலோகநாதன் கல்கத்தாவிலுள்ள உரத் தொழிற்சாலையில் உயர் பயிற்சி பெறுவதற்காக கல்கத்தா சென்றுள்ளார் இவர் அங்கு ஓர் ஆண்டுகாலம் பயிற்சி பெறுவார் சென். ஜோன்ஸ் கல்லூரியினதும் கட்டுபெத்த தொழில் நுட்பக்கல்லூரியினதும் பழைய மாணவருமான இவர் இளைப்பாறிய உபஅதிபர் திரு. க, சங்கரப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனாவார். (தே. நி)

— —

கோப்பாய், வியா கோப்பாய்க் கிராமசபையாரால் நடாத்தப்பட்டு வரும் உள்ளூராட்சி வாரத்தையொட்டி சென்ற ஞாயிறன்று பகல் கோப்பாய் வீரபத்திரசுவாமி கோவிலில் விசேஷஆராதனைகளும், திருமுறைப் பஜனைகளும் நடைபெற்றன.

## ஜெயராஜ் எழுதுவது..

திருக்கேதீச்சரம் செல்ல மன்னார் ஸ்டேஷனில் இறங்குவதுதான் வசதி. அங்கிருந்து பஸ்ஸுகள் அடிக்கடி செல்லுகின்றன. திருக்கேதீச்சரம் என்ற பெயரிலேயே ஸ்டேசன் உள்ளதுதான். ஆனால் விடியற்காலம் இருட்டிலே ரயில் அங்கு செல்லுகிறது ஸ்டேஷனில் தங்கிருக்க வசதி இல்லை. ஸ்டேஷனிலிருந்து கோவிலுக்கு ஒரு மைலுக்கு மேல் உள்ளது. வண்டி வசதிகளுமில்லை. அந்த ஸ்டேஷனில் ஒரு மடம் கட்டி தங்கி இருக்க வசதி செய்ய வேண்டும். மாட்டுவண்டி அல்லது குதிரை வண்டி இருப்பின் அங்கிருந்து கோவிலுக்குச் செல்ல வாய்ப்பாக இருக்கும். வரவர திருக்கேதீச்சரம் வளர்ந்து அதிக யாத்திரீகர்கள் வருவதால் இந்த வசதிகளும் நாளாவட்டத்தில் ஏற்படுமென்றே நம்பலாம்.

0 0 0

கொழும்பிலிருந்து தலைமன்னாருக்கு டிக்கெட் எடுத்துவிட்டதால் நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று தலைமன்னாரில் இறங்கினேன். அங்கு யாரையும் தெரியாது. எங்கே தங்குவது? என்று சற்றே திகைக்கையில் ஸ்டேஷன்மாஸ்டர் அன்புடன் 'வருக வருக' என்று அழைத்தார். வசதியாக தங்கி இருக்க வேண்டிய ஒழுங்கு செய்தார். எனக்கு எல்லாம் வியப்பாக இருந்தது. இறைவனை நண்பராகக் கொண்டுவிட்டால் உலகமெல்லாம் நண்பராகிவிடுமென்பார் சுவாமி ராமதாஸ் இல்லாவிட்டால் முன்பின் தெரியாத அந்த இடத்திலே இப்படி அன்பு கிடைக்க முடியுமா?

பின்னர் அங்கிருந்து பஸ்ஸிலே மன்னார் சென்று, அரசாங்க அதிபரான அன்பர் கதிர்காமநாதனைக் கண்டு அவருடன் திருக்கேதீச்சரம் சென்றேன். சிவராத்திரி விழாவை சிறப்பாகக் கொண்டாடவிசேஷ ஒழுங்குகள் செய்துள்ளதை அவர் மூலம் அறிந்தேன், அன்று தைப்பூசம். அந்தப் புண்ணிய திருநாளில் அந்த ஸ்தலத்தில் தரிசனம்செய்ய முன்கூட்டி திட்டமெதுவும் போடவில்லை. நமக்கான திட்டங்களை முன்கூட்டியே யாரோ ஒருவன் தயாரித்து விடுகிறான்! எல்லாம் எப்போதோ முடிந்த காரியம்!

0 0 0

திருக்கேதீச்சரத்தில், வாலஸ்தாபனம் செய்து, கோவில் கூட்டுவதற்கான ஏற்பாடுகள் எல்லாம் தீவிரமாக நடப்பதாகக் காரியதரிசி அல்லிராசா தெரிவித்தார். திருக்கேதீச்சரம் தான் திருப்பெருந்துறை என்ற 'பித்து' எனக்கு இன்னும் பலப்பட்டு வருவதால் அங்கு எங்கும் மாணிக்கவாசகராகவே என் மனக்கண்ணுக்குப்பட்டது. தைப்பூசத்தன்றுதான். சிதம்பரத்திலே பதஞ்சலி வியாக்கிரபாதருக்கு நடராஜப்பெருமான் விசேஷ காட்சி அளித்தது. அந்த நல்ல நாளில் கேதீச்சரத்திலும் நல்ல கூட்டம். யாழ்ப்பாணத்திலிருந்தும் பல அன்பர்கள் வந்து தரிசித்தனர். பூநகரி குறுக்குப் பாதையைப் பலப்படுத்த வேண்டியது அவசர வேலை. அது பூர்த்தியானால் அதிகமான பக்தர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து அங்கு வந்து தரிசிக்க முடியும். யார் உள்ளத்தில் புகுந்து கேதீச்சரநாதன் இந்தப் புண்ணியப் பணியை நிறைவேற்றச் செய்வாரோ.

0 0 0

அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற்றம்பலமென்று தேவாரம் கூறுகிறது. அதேபோல் திருக்கேதீச்சரத்திலும் அன்னம் பாலிக்கிறது. சாப்பாட்டுக்குக் குறைவில்லை. பல இடங்களிலும் அன்னதானங்கள் நடக்கின்றன. அங்கிருந்து மன்னாருக்குத் திரும்புகையில் தள்ளாடி இராணுவமுகாமைக் கண்டேன். இராணுவப் பயம் அப்பகுதியில் மக்களுக்கு இன்னும் இருக்கிறதாம். தலைமன்னாரிலும்கூட இராணுவமுகாம் வழியாக நடந்து செல்ல பலர் அஞ்சுவதாகத் தெரிகிறது. மக்களைப் பாதுகாக்க வேண்டிய இராணுவம் மக்களுக்கே ஆபத்தாக இருப்பதாயின் அதைஎப்படி எவ்வளவு காலம் சகிப்பது?

மற்ற எந்த இடத்திலும் மக்களுக்கு அடையாளச் சீட்டு இல்லாதிருக்கையில் மன்னாரில் மட்டும் அதை வைப்பானேன் என்று மன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கையை நிராகரித்த பிரதமர் எதிர்க்கட்சித் தலைவர்களின் வற்புறுத்தலை ஏற்றுக் கொண்டார். இதன்விளைவாக இன்று வடபகுதி ஆட்சிமன்றப் பிரதிநிதி ஒருவர் இராணுவ சிப்பாயினுல் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறுர்.

இராணுவத் தாக்குதல் வடபகுதியில் புதிய சம்பவமல்ல. இதற்குமுன்னரும் பல தடவைகளில் இப்படிச் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. சமீபத்தில் மன்னுரில் நடந்த சம்பவங்களும் இதற்குச் சான்று. சட்டவிரோதக் குடியேற்றத்திலும் கள்ளக்கடத்தலிலும் ஈடுபடுபவர்கள்தான் இச் சம்பவங்களுக்குக் காரணம் என்று ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி அரசாங்கமும் இராணுவ மேலிடமும் நிலைமையைச் சமாளித்து இராணுவ சிப்பாய்களுக்கு 'சபாஷ்' போட்டு விடுவதும் வழக்கம்.

பருத்தித்துறைத் தொகுதி பிரதிநிதி மட்டுமல்ல பொது மக்கள் சிலரும் பாடசாலை மாணவர் சிலரும தாக்கப்பட்டிருக்கின்றனர். இச் சம்பவத்தின் பின்னர் நிலைமையை நேரில் ஆராய்வதற்காக வல்வெட்டித்துறைக்கு வந்த இராணுவ தளபதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள திரு. துரைரத்தினத்திடம் தமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்திருப்பதுடன் குற்றம்செய்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் உறுதியளித் திருக்கிருர். இதற்கு முன்னர் நடந்த சம்பவங்களின்போது குற்றஞ் செய்தவர்கள் சரியான முறையில் தண்டிக்கப்பட்டிருந்தால் ராணுவத்தில் கட்டுப்பாடும் ஒழுங்கும் பிடித்திருக்கின்றனரா?

கடந்த ஆறுமாத காலத்தில் சட்டவிரோதமாக எவரும் குடியேறவில்லையென்று அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கள்ளக் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளை பொலிசாரிடமும் சுங்கப்பகுதியினரிடமும் ஒப்படைத்துவிட்டு சட்டவிரோதக்குடியேற்றத்தடுப்பு நடவடிக்கைகளை பொலிசாரிடமும் கடலில் சென்று எதையும் சாதிக்கக்கூடிய பயிற்சி பெற்ற கடற்படையினரிடமாவது ஒப்படைத்துவிட்டு இராணுவத்தினரை வேறு சில நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்காக இங்கிருந்து அகற்றுவது உபயோகமாக இருக்கும்.

சட்டவிரோதக்குடியேற்றம் நின்றபின்னரும், கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்கு வேறு வழிகள் இருந்த போதிலும் இராணுவத்தினரை வடபகுதியில் தொடர்ந்துவைத்திருப்பது காலனி ஆதிக்ககாலத்தில் மக்களின் எழுச்சியை அடக்குவதற்காக அந்நிய ஆட்சியினர் படைகளை உபயோகித்ததுபோல இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை இனத்தவரையும் அடக்கி ஒடுக்கவே இங்கு இராணுவம் வைக்கப்பட்டுள்ளதென்ற தமிழ் பேசும் மக்களின் சந்தேகத்தை வலுப்படுத்தும்.

எனவே உண்மையான தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டவும் அரசாங்கத்தின் மீது சிறுபான்மையினர் நம்பிக்கை வைக்கவும் சிறிது காலத்துக்காவது, பரீட்சார்த்தமாக வடபகுதியில் இருந்து இராணுவத்தினரை அகற்ற அரசாங்கம் முன் வரவேண்டும்.


வியாபாரம் பெருக

விளம்பரம் செய்க


பானமையோருக்கான ஜனநாயகம்.

சோஷலிச ஜனநாயகத்தின் மிக முக்கியமான குணும்சங்களில் ஒன்று உரிமைகளையும் சுதந்திரத்தையும் அதன் சம்பிரதாயமான பிரகடனங்களிலிருந்து அதன் சார்பு மையத்தை, அவற்றின் உண்மையான நடைமுறைக்கு கொண்டுசெல்வதாகும். அதே சமயத்தில் சோஷலிச ஜனநாயகம்என்பது அரசியல் வாழ்வுத் துறையில மட்டும் பதிந்திருப்பது அல்ல, ஏனைய எல்லா பொது உறவுத் துறைகளிலும்பதிந்துள்ளது என்பதை வலியுறுத்தியாக வேண்டும். இது எல்லா உழைக்கும் மக்களிடையே சமத்துவத்தை நிறுவுவதும் சமூக தேசிய இன ஒடுக்கு முறைகளை அழித்துவிடுவது மட்டுமல்ல, உழைக்கும் மக்

"அதிகாரமாக" இருக்குமானுல் பிறகு எதிர்ப்பு வர்க்கங்கள் மறைந்து அடக்குவதற்கு ஒருவரும் இல்லை என்கிற போது அரசுக்கு என்ன நேரிடும்? கேள்விக்கு பதிலளிக்கையில் எதிர்காலக் கம்யூனிஸ சமுதாயத்தில் அரசு என்பதுவாடி உதிர்ந்துவிடும் அதிகபட்ச ஜனநாயக அமைப்புகளொண்ட அரசுகூடத்தேவைப்படாது என்று லெனின் கூறுகிறுர். இந்தச் சந்தர்ப்பத்தில் "ஜனநாயகம் உண்மையிலே முழுமையடைந்து விடும் நடைமுறைவழக்காகி விடும் ஆகையால் வாடி உதிர்ந்து விடும்" என்று அவர் எழுதினுர்.

அதே சமயத்தில் சோஷலிச அரசு வாடி உதிர்வதற்குச் செல்லும் வழி அதனைத் தொடர்ந்து சோஷலிச ஜனநாயகம் அவற்றின்சகல

# துவாரகா ஐயாத்துரையின் நடன அரங்கேற்றம்

நமது கலைகளில் புனிதமானதும், தொன்மைவாய்ந்ததுமான பரதக்கலையை நமது பெண்கள் அதிகமாக இப்போது பயின்று வருகிருர்கள் பயிற்சிபெற்ற பெண்கள் அரங்கேற்றம் நடத்துவது சாதாரணவழக்கமாக மாறிவிட்டது'

அண்மையில்செல்வி துவாரகா ஐயாத்துரை அவர்களின் நடன அரங்கேற்றம் யாழ். நகர மண்டபத்தில் நடைபெற்றது. சீவக சிந்தாமணியில்கூறப்பட்டதுபோல 'நடையறிபுலவர்' சூழாம் சூழ நடன அரங்கேற்றம் நடைபெற்றது. நாட்டிய கலாகேசரி வழுவூர் இராமையாபிள்ளை அவர்கள் இந்த அரங்கேற்றத்தில் கலந்து சிறப்பளித்தார்.

இலங்கையில் பல நடன வல்லுநர்களிடம் பயிற்சிபெற்ற செல்வி துவாரகா தமிழ்நாடு சென்று அடையாறு திரு கே லக்ஷ்மணன் அவர்களிடம் சிறப்புப் பயிற்சி பெற்றுத் திரும்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது. அன்று நடைபெற்ற அரங்கேற்றத்தில் செல்வி துவாரகா சிறந்த அபிநயனப் பயிற்சியுடையவர் என்பதை காண்பித்தார். நடனத்தில் அபிநயனத்துடன் முகபாவமும் மிகமுக்கியமானது. முக பாவ வெளிப்பாட்டில் அவ்வளவு பூரணத்துவம் பெறவில்லை என்ருலும் முன்னேற இடமுண்டு என்பவற்றுக்கான அறிகுறிகள் தாராளமாகத் தென்பட்டன.

நடனத்தில் மிக முக்கிய இடம் பெறுவன நட்டுவாங்கம், பக்கப்பாட்டு, பக்கவாத்தியம் என்பன. நட்டுவாங்கம் கம்பீரமாக இருந்தால்தான் நடனம் சோபிக்கும். நட்டுவாங்கம் சரியில்லை என்ருல் நடனம் தளர்வுகாணும். இந்த அரங்கேற்றத்தில் நட்டுவாங்கம்வீறுபோதவில்லை. பக்கப்பாடல்கள் பல சந்தர்ப்பங்களில் சோர்ந்துவிட்டன. இதனுலோ என்னவோ பக்கவாத்தியங்களும் அன்று வழமைக்கு மாருக வலிமை குன்றிவிட்டன. முகபாவங்களை வயலினேதோற்றுவிக்க முடியும். ஜதிகளை மிருதங்கம் தோற்றுவிக்க வல்லது. இவற்றின் கூட்டியம் நன்ருக அமைந்திருக்க முடியும்.

எது எப்படி இருந்தாலும் தொடர்ச்சியான பயிற்சி மூலம் வருங்காலத்தில் ஒரு சிறந்த நாட்டிய தாரகையாக விளங்கக்கூடிய அம்சங்களை நிறையப் பெற்றவர் செல்வி துவாரகா. அவர் கலைப்பணி வாழ அன்னைகலைவாணி அருள் சுரக்கட்டும். இவர் முன்பு பருத்தித்துறையில் பிரபல வர்த்தகராக இருந்தவரும் இப்போது யாழ்ப்பாணத்தில் அரிசிஆலை முதலாளியாகவுமிருக்கும் திரு.சி. ஐயாத்துரை அவர்களினதும், திருமதி ஐயாத்துரை அவர்களினதும் புதல்வியாவார். இவர் நடனகலாவல்லி சிவகுமாரி இராசையா அவர்களின் ஒன்றுவிட்ட தங்கை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆ. தேவராசன்


பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு விசேஷ காட்சிகள்

ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதால் தொடர்ந்து

காட்சியளிக்கும்

ஔவையார்

வின்ஸரில்

தினசரி 4 காட்சிகள்



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு பப்ரவரிமாதம் 13-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


ரூபாய்முத்திரை வெளியிடப்படும். கெப்பிட்டி பொலதிசாவை ஞாபகார்த்தமாக

விசேஷ ஆராதனைகளும், திருமுறைப் பஜனைகளும் நடைபெற்றன.

ஸ்தலத்தில் தரிசனம்செய்ய முன்கூட்டி திட்டமெதுவும் போடவில்லை. நமக்கான

# நாவலர் பெருமான் கந்தபுராண சபையார் வழி காண்பார்களாக

**நாவலர் பெருமான் கந்தபுராண சபை கொண்டாடும் கந்தபுராண வாரத்தை முன்னிட்டு பண்டிதமணி அளித்த ஆசிர்செய்தி இங்கு பிரசுரமாகிறது**

"இந்தியாவிலே சைவசமயிகளுள்ளுஞ் சைவ சமயத்தில் உட்பற்றில்லாதவர் பலரேயாகவும், இவ்வியாழ்ப்பாணத்திலே கிறிஸ்து மதத்திற் புகுந்தவர்களுள்ளுஞ் சைவசமயத்தில் உட்பற்றற்றவர் அரியராதலாகிய இத்துணை விசேடத்துக்குக் காரணந்தான் என்னையெனிற் கூறுதும்: எத்துணைக்காலந் திருப்பித் திருப்பிப் படிப்பினுங் கேட்பினும் எட்டுணையுந் தெவிட்டாது தித்தித்தமுதூறும் அத்தியற்புத அதிமதுரத் திவ்விய வாக்காகிய கந்த புராணத்துள்ள பதிலக்கணத் திரு. விருத்தங்களைக் கேட்டல் சிந்தித்தல்களினுல் இவர்களுள்ளத்தூற்றெடுத்த மெய்யுணர்வேயாம். இப்போதும் இருக்கின்ற ஒரு கிறிஸ்து சமய உபதேசியார் ஏறக்குறைய இருபத்தெட்டு வருஷத்துக்கு முன் நம்முள்ளே நால்வருடன் அந்தரங்கத்திற் கலந்து பேசிய போது "பைபிள் வசனங்களெல்லாம் ஒருங்கு திரண்டுங் கந்த புராணத்து அவைபுகு படலத்தினும் அமைச்சியற் படலத்தினுமுள்ள பதிலக்கணத்திரு விருத்தங்களுள் ஒன்றனது ஓரடிக்குத்தானும் ஆற்ருது ஆற்ருது! என்ன அற்புதம் அற்புதம்" என்று கண்ணீர் வார உரோமஞ் சிலிர்ப்ப மிக்க ஆராமையோடு சொல்லினர்"

'பாதிரிமார்கள், 'கிறிஸ்து மதம எத்தேசத்திற் பரவினும் பரவும்: யாழ்ப்பாணத்தில் உள்ளபடி பரவாது' என்று அந்தரங்கத்திலே புலம்புகின்ருர்கள்.

0

கந்தபுராண மகிமை பற்றி நாவலர் அவர்கள் எழுதியவைகள் மேற்குறிப்பிட்ட வசனங்கள், 95 வருடங்களுக்கு முன் எழுதிய யாழ்ப்பாணச் சமய நிலையில் இவ்வசனங்கள் வருகின்றன.

நூறு வருடங்களுக்கு முன் கந்தபுராண ஊற்று ஆலயந் தோறும் உற்பத்தியாகி ஆண் பெண் இருபாலார் உள்ளத்திலும் பெருக் கெடுத்தது அவர்கள் இரத்தத்தில் கந்தபுராண கலாசாரம் கலந்திருந்தது. இப்பொழுது அப்படிச் சொல்லமுடியாது கந்தபுராண பரம்பரை அருகி வருகின்றது. வருஞ் சந்ததிக்குக் கந்தபுராணம் புதிது. கந்தபுராண யாழ்ப்பாணம் இங்ஙன ஆகுமானுல், இந்தியாவின் நிலை எங்ஙனமாகும்!

0

"இந்தியாவிலே சைவசமயிகளுள்ளுஞ் சைவசமயத்தில் உட்பற்றில்லாதவர் பலரேயாகவும்" என்று, நாவலர் பெருமான் அன்று எழுதிய இந்தியா. இன்று நாஸ்திகம் தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றது

மிண்டிய மாயாவாத
மென்னும்
சண்ட மாருதம் சுழித்
தடித்து ஆர்க்க,
உலகாயதன் என்னும்
ஒண்டிறற் பாம்பு
கலா பேதத்த கடுவிடம்
கான்று,

பலவேறு வண்ணங்களிற் படம் விரித்து வருகின்றது உலகாயதம்-நாஸ்திகம்.

0

நாஸ்திகப் பாம்பு நமது நாட்டை எட்டுகின்றது. எட்டி விட்டது!

நாமோ கந்தபுராணத்தை மறந்து விட்டோம், நாவலரைப் பெயரளவில்வைத்திருக்கிருேம்.

நமது சமய நிலை அரிவரியிலிருந்து ஆரம்பிக்க வேண்டிய நிலைக்கு வந்து விட்டது

'நாவலர் பெருமான் கந்தபுராண சபையார்', கந்தபுராண கலாசார ஊற்று நமது நாட்டில் பழைமை போலப் பெருக்கெடுக்க வழி காண்பார்களாக.

கலியுகவரதராகிய சுப்பிரமணிய சுவாமியின் திருவருள் கிடைப்பதாக.

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளின் திருவடிகளை அடுமை யறித்து வழுந்துந் திருநாள் அணுகுவதாக.

**— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை —**

## நல்லூரில் கந்தபுராண வழிபாடு

நேற்று ஆரம்பமாகி 18-ந் திகதிவரை நடைபெறும் கந்தபுராண வாரத்தை முன்னிட்டு நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நாவலர் பெருமான் கந்தபுராண சபையினர் விசேட பிரார்த்தனை செய்தனர். கச்சியப்ப சிவாசாரியர் பெயரில் நாயன்மார் கட்டு திரு. கா. இரகுநாதன் அர்ச்சனைசெய்தார்.

நாவலர்பெருமான் திருச்சிலை முன் கந்தபுராணத் தோத்திரப்பாடல்களைச் சபை உபதலைவர் இரா. சிவசுப்பிரமணியம் காரியதரிசி வித்துவான் க. கணபதிப்பிள்ளை முதலியோர் ஓதி வழிபட்டனர்.

## நாடெங்கும் விழாக்கள்

கொழும்பில் நடைபெறவிருக்கும் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்ட வெள்ளி விழாவில் புங்குடுதீவு சித்தாந்த வித்தகர் சி. கணபதிப்பிள்ளை வைத்தியரின் கந்தபுராண விரிவுரையை நடாத்த திருக்கூட்டத்தலைவரான சரவணமுத்துச் சுவாமிகள் ஏற்பாடுசெய்துள்ளார்.

கோப்பாய்த் தவநெறி மன்றத்தினர் நடாத்தும் விழாவில்கொக்குவில் திரு. த. குமரசுவாமிப்புலவர், கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, கிராமசபைத் தலைவர் திரு. சி. பரமானந்தராசா முதலியோர் பங்குபற்றுகின்றனர்.

பண்ணுகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் அதிபர் திரு. செ. சீனிவாசகம் தலைமையில் நடைபெறும் கச்சியப்பர் குருபூசை விழாவில் பண்டிதர் ஐ. ஆறுமுகம், சங்கீதபூஷணம் க. சிவபிள்ளை முதலியோர் பங்குபற்றுகின்றனர்

மக்களுக்கு அடையாளச் சீட்டு இல்லாதிருக்கையில் மன்ஞரில் மட்டும் அதை வைப்பானேன் என்று மன்னுரைச் சேர்ந்த ஓர் அன்பர் ஆத்திரத்துடன் கேட்டார். அடையாளச் சீட்டு இல்லாதபோது யாவரையும் 'கள்ளத்தோணி' என்று கைதுசெய்து அடைத்தனர். அந்த ஆபத்தைத் தவிர்க்க அடையாளச் சீட்டு முறையை அங்குதான் வைத்தனர். ஆனுல் ஒருவர் தன் ஊரிலேயே அடையாளச் சீட்டை எப்போதும் தன்னுடன் வைத்திருக்க வேண்டுமாயின் அவருக்கு எப்படி இருக்கும்? கள்ளக் குடியேற்றம் வெகுவாக நின்றுவிட்ட நிலையில் அங்கு இராணுவ முகாம்களை இன்னும் நீடிப்பது அவசியம்தானு? அங்கு பொதுமக்களுக்கு பெரும் தொந்தரவு அளிக்கும் இந்த இராணுவத்தினரை அப்பகுதியிலிருந்து அகற்றுவது அம்மக்களுக்கு மட்டுமன்றி இராணுவத்தினருக்கே அது நன்மையாகும். வேறு நல்ல ஆக்க வேலைகளில் அவர்களை ஈடுபடுத்தலாம். தமிழரைப் பயமுறுத்தி அடக்கியாள வேண்டுமென்ற எண்ணம் பிரதமருக்கு உண்மையில் இல்லாவிடில் அவர்களது நல்லெண்ணமும் ஆதரவும் வேண்டுமென்று அவர் விரும்புவதாயின், இந்த இராணுவ முகாம்களை அங்கிருந்து கூடிய சீக்கிரத்தில் அகற்றிவிட அவர் உத்தரவிட வேண்டும். அந்தத் துணிச்சலும் நல்லறிவும் அவருக்கு வருமா?

0 0 0

கல்வி ஞானக்கலைப் பொருளாயவன், செல்வம் மல்கு திருக்கனூரீசனை, எல்லியும் பகலும் மிசைவானவா, சொல்லிமூர் றுந்துயரங்கள் தீரவே.

— அப்பர் அடிகள்

## கௌரவிக்கப்படுவார்

ஊரதீவு, வியாழன்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் விழா இம்மாதம் 13-ம் திகதி புங்குடுதீவு கிராமசபை மண்டபத்தில் இடம்பெற இருக்கிறது. புங்குடுதீவு கிராமசபைத் தலைவர் திரு. கா. மதியாபரணம் தலைமையில் நடைபெறும்.


## விற்பனைக்கு

திறமான இங்கிலிஷ் றக்லன் 5" ஒட்டோமற்றிக் லேத் விற்பனைக்கு உண்டு. நேரில் பார்வை இடலாம். No 6, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 1652



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org